


பெரியோர்
வாழ்விலே
சுவையான
நிகழ்ச்சிகள்
2
SAGAR
அழ. வள்ளியப்பா

# பெரியோர் வாழ்விலே

சுவையான நிகழ்ச்சிகள்
(இரண்டாம் தொகுதி)

குழந்தைக் கவிஞர்

**அழ.வள்ளியப்பா**



விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

**184, பிராட்வே-சென்னை-6000108**

தொலைபேசி எண்: 5270795

☆ Tittle : **Periyor Vazhvile Suvaiyana Nigalchikal-II**

☆ Subject : Biography

☆ Author : AL.Valliappa

☆ Illustrator : Sagar

☆ DTP : Siva Graphics, 2, Parameswari colony, Chennai-24, Ph: 4730810

☆ Publisher : Kulanthai Puthaga Nilayam, Anna Nagar, Chennai-600 040.

☆ Sixth Edition : June, 1983

☆ Seventh Edition : January, 2001

☆ Price : **Rs. 12.00**

விலை ரூ. 12.00

வெளியிட்டோர்:

குழந்தை புத்தக நிலையம்,

அண்ணாநகர், சென்னை-600 040.

# இந்தப் புத்தகம்

நம் தேசத்திற்கும் மொழிக்கும் பெருந்தொண் டாற்றிய பெரியோர் பலர். அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் நமக்கெல்லாம் நல்வழி காட்டி வருகின்றன.

இத்தொகுப்பில் ஐந்து பெரியவர்களின் வாழ்க்கை யில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளை மிகவும் சுவையாக எடுத்துக் கூறுகிறார் குழந்தைக் கவிஞர். இவற்றில் 'விளையாட ஒரு தோழி' 'பதினான்கு வயதில் பத்திரிகாசிரியர்'– இரண்டும் ஏற்கெனவே 'பூஞ்சோலை'யில் வெளிவந்தவை. மற்றவை புதிதாக எழுதப்பெற்றவை.

குழந்தைக் கவிஞர் எழுதிய 'பெரியோர் வாழ்விலே சுவையான நிகழ்ச்சிகள்'–முதல் தொகுதி இதுவரை எட்டுப் பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டு அரசினர் பரிசையும், ஆசிரியர், பெற்றோர், சிறுவர் ஆகியோரின் நல் ஆதரவையும் அது பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து இப்போது இந்த இரண்டாம் தொகுதி ஏழாவது பதிப்பு வெளிவருகின்றது.

இதற்கும் நல்ல வரவேற்புக் கிடைக்கும்; சிறுவர் உலகம் இதனால் நற்பயன் அடையும் என நம்பு கிறோம்.

சென்னை
14.12.2000 **குழந்தைப் புத்தக நிலையத்தார்**

# உள்ளே உள்ளவை


பக்கம்–5
ஒரு ரூபாய் ஊழியர்!

பக்கம்–18
விளையாட ஒரு தோழி!

பக்கம்–26
ஆனந்த வருஷத்து அதிர்ஷ்டக் குழந்தை!

பக்கம்–39
பதினான்கு வயதில் பத்திரிகாசிரியர்!

பக்கம்–51
காற்றாடியால் காயம்பட்டவர்!



# ஒரு ரூபாய் ஊழியர்!

திருவாரூரிலே ஒரு தாசில்தார் இருந்தார். ஒரு நாள் காலையில், வீட்டில் உட்கார்ந்து அவர் எதையோ படித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே சிலர் ஓடி வந்து, ''ஐயா, ஐயா, எங்கள் கிராமத்துக்குப் பக்கத்தில் இருந்ததே அணை. அதை வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விட்டது! உடனே வந்து கவனிக்க ஏற்பாடு செய்ய வேணும்'' என்று வேண்டினர்.

இதைக் கேட்டதும் தாசில்தார் ஒரு சேவகனை அழைத்து, ''நீ உடனே போய், அலுவலகத்தில் யாராவது குமாஸ்தா இருந்தால் கையோடு கூட்டிக் கொண்டு வா. உம். சீக்கிரம்'' என்று உத்தரவிட்டார்.

சேவகன் நேராகத் தாசில்தாருடைய அலுவலகத்திற்குச் சென்றான். அப்போது அங்கு முத்துசாமி என்ற ஒரு சிறுவன் மட்டுமே இருந்தான். வேறு யாரும் இல்லை. சேவகன் அவனிடம் செய்தியைச் சொன்னான். சொல்லிவிட்டு, ''பெரியவர்கள் யாரும் வரவில்லையா?'' என்று கேட்டான்.

''இல்லை. அதனால் என்ன? நான் வருகிறேன். வா. போகலாம்'' என்று கூறித் துணிச்சலோடு தாசில்தாரிடம் வந்தான் முத்துசாமி.

தாசில்தார் முத்துசாமியை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். பிறகு, சேவகனை நோக்கி, ''என்னடா இது, இந்தப் பொடியனை அழைத்து வந்திருக்கிறாயே! வேறு யாரும் இல்லையா?...'' என்று சலிப்போடு கூறிவிட்டு, முத்துசாமியைப் பார்த்து, ''சரி, சரி. ஏனப்பா, உனக்கு அந்த உடைப்பைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் உத்தரவு கொடுத்தால், உடனேயே நான் அங்கே போய், விவரம் அறிந்து வருகிறேன்'' என்றான் முத்துசாமி.

''சரி, போய் வா'' என்று அரை மனத்துடன் அவனை அனுப்பி வைத்தார் தாசில்தார்.

முத்துசாமி உடைப்பு எடுத்த இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பி வந்தான். வந்தவன் கையில் ஒரு தாள் இருந்தது. அதைத் தாசில்தாரிடம் கொடுத்தான். அதை அவர் உற்றுப் பார்த்தார்.

அதில், எவ்வளவு தூரம் அணை உடைந்திருக்கிறது, அணையைத் திரும்பக் கட்டுவதற்கு என்னென்ன சாமான்கள் வேண்டும். அந்தச் சாமான்கள் எங்கெங்கே கிடைக்கும். எவ்வளவு நாட்களாகும், எவ்வளவு ரூபாய் செலவாகும் என்ற விவரங்க ளெல்லாம் இருந்தன.

தாசில்தார் அதைப் பார்த்து வியப்படைந்தார். ஆனாலும், உடனே அதை அவர் ஏற்றுக்கொள்ள வில்லை. தலைமைக் குமாஸ்தாவிடம் அந்தத் தாளைக் கொடுத்து, ''இந்தப் பையன் என்னென் னவோ இதில் எழுதிக் கொடுத்திருக்கிறான். நேராகப் போய்ப் பார்த்தால்தான் தெரியும். உடனே நீர் புறப்பட்டுச் சென்று, விவரம் அறிந்து வாரும்'' என்றார்.

தலைமைக் குமாஸ்தா உடைப்பு எடுத்த இடத்திற் குச் சென்றார். நிலைமையை நேரில் அறிந்தார். சிறுவன் முத்துசாமி எழுதிய விவரங்கள் நூற்றுக்கு நூறு சரி என்பதை உணர்ந்தார். அப்படியே தாசில் தாரிடம் போய்ச் சொன்னார். அதைக் கேட்டு தாசில்தார் மிகுந்த வியப்படைந்தார். முத்துசாமியை மிகவும் பாராட்டினார்.

★ ★ ★

அதே முத்துசாமி தாசில்தாரை மற்றொரு முறை வியப்பிலே ஆழ்த்தினான்.

ஒருநாள், பெரிய மிராசுதார் ஒருவர் தாசில்தாரிடம் வந்தார். ''என்னுடைய நிலங்களுக்கு நான் எவ்வளவு

வரி செலுத்த வேண்டும்? தொகையைச் சொன்னால், உடனே கட்டிவிடுகிறேன்'' என்றார்.

அந்த மிராசுதாருக்கு அந்தத் தாலுகாவில் பல இடங்களில் நிலம் இருந்தது. சுமார் இருபது கிராமங் களில் அவருக்கு நிலம் இருந்ததால் கணக்குகளைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

குமாஸ்தாக்களில் ஒருவரைக் கூப்பிட்டுக் கணக்கைப் பார்க்கச் சொல்லலாம் என்று தாசில்தார் நினைத்தார். அப்போது, அருகிலே சிறுவன் முத்து சாமி நின்று கொண்டிருந்தான். அவனிடம், அந்த மிராசுதாரின் பெயரைச் சொல்லி, ''இவருடைய வரிப் பாக்கி எவ்வளவு என்று கேட்டுவா'' என்றார் தாசில்தார்.

ஆனால், முத்துசாமி யாரிடமும் போய்க் கேட்கவு மில்லை; கணக்குப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கவு மில்லை. நின்ற இடத்தில் நின்று கொண்டே, 'இவர் இவ்வளவு கொடுக்க வேண்டும்' என்று ஏதோ ஒரு தொகையைச் சொன்னான். அதைக் கேட்ட தாசில்தார், ''என்னடா இது! வாயில் வந்த ஒரு தொகையைச் சொல்கிறாயே! சம்பந்தப்பட்ட கணக்குப் பிள்ளைகளைக் கூப்பிடு. கணக்கைச் சரியாகப் பார்த்துச் சொல்ல வேண்டும்'' என்றார்.

தாசில்தார் விருப்பப்படியே கணக்குப் பிள்ளைகளை அழைத்து வந்தான் முத்துசாமி. அவர்கள் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து, ஒரு காகிதத்தில் ஒரு தொகையைக் குறித்துக் கொண்டார்கள். பிறகு,

எல்லாவற்றையும் கூட்டிப் போட்டு, மொத்தத் தொகையைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன தொகையும், முத்துசாமி சொன்ன தொகையும், ஒன்றாகவே இருந்தன. தம்படிகூட வித்தியாசமில்லை! இதைக் கண்டு தாசில்தார் மிகுந்த வியப்படைந்தார். அவர் மட்டும் தானா? மிராசுதார், கணக்குப் பிள்ளைகள் எல்லாருமே அளவில்லாத ஆச்சரியமடைந்தார்கள்.

முத்துசாமியிடம் இப்படிப்பட்ட திறமையும், ஞாபக சக்தியும் இருப்பதைக் கண்ட தாசில்தார் வியப்படைந்ததோடு நிற்கவில்லை. அன்றே முத்துசாமியை அழைத்து, ''முத்துசாமி, இன்று முதல் உன் சம்பளத்தை மூன்று மடங்கு ஆக்கி விட்டேன்'' என்று கூறினார்.

மூன்று மடங்கு! அப்படியானால் முத்துசாமிக்கு மாதம் எவ்வளவு கிடைத்திருக்கும்?

120 ரூபாயாக இருக்குமா?

இல்லை.

90 ரூபாயாக இருக்குமா?

அதுவும் இல்லை.

60 ரூபாய்...?

அது கூட இல்லை.

அப்படியானால், 30 ரூபாயாகத்தான் இருக்க வேண்டும்.

அடேயப்பா! அவ்வளவு பெரிய தொகையா! சம்பளத்தை 30 மடங்காகக் கொடுத்திருந்தால், முத்துசாமிக்கு 30 ரூபாய் கிடைத்திருக்கும். ஆனால் மூன்று மடங்காகக் கொடுத்ததால், மூன்றே ரூபாய் தான் கிடைத்தது! ஆம், முத்துசாமி முன்பு வாங்கிய சம்பளம் மாதம் ஒன்றுக்கு முழுசாக ஒரு ரூபாய்தானே!

அன்று ஒரு ரூபாய் சம்பளத்தில் கணக்குப் பிள் ளைக்கு உதவி ஆளாக இருந்த முத்துசாமி, பிற் காலத்தில் ஆயிரம் ஆயிரமாகச் சம்பளம் வாங் கினார்! சர். டி. முத்துசாமி அய்யர் என்ற பெயர் தான் உங்களுக்குத் தெரியுமே! இதுவரை படித்த தெல்லாம் அவரைப் பற்றித்தான்!

அந்தக் காலத்தில் நீதிபதிகளெல்லாம் வெள்ளைக் காரர்களாகத்தான் இருப்பார்கள். இந்தியர்களுக்கு அந்தப் பதவி கிடைப்பதே இல்லை. ஆனாலும், முதல் முதலாக அந்தப் பெரிய பதவியைப் பெற்ற இந்தியர் சர்.டி.முத்துசாமி அய்யர்தான்!

★ ★ ★

முத்துசாமி அய்யர் தாசில்தாரிடம் மூன்று ரூபாய் உத்தியோகத்தில் இருந்தபோது ஓரளவு தமிழ் படித்திருந்தார். ஆனால், ஆங்கிலத்தில் ஓர் எழுத்துக் கூடத் தெரியாது. ஆயினும், ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது.

தினமும் காலை பதினோரு மணியிலிருந்து பிற்பகல் இரண்டு மணிவரை அவருக்கு வேலை

கிடையாது. அந்த நேரத்தை அவர் வீணாக்க மாட்டார். அங்கேயிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு அவர் போவார்; உள்ளே போய் உட்காரமாட்டார். வெளியே ஜன்னல் ஓரமாக நின்று கொள்வார். ஆசிரியர் மற்ற பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைக் கவனமாகக் கேட்பார். இப்படியே சில நாட்கள் சென்றன. மிகவும் எளிதாகப் பல ஆங்கிலச் சொற்களை அவர் கற்றுக்கொண்டு விட்டார்.

தினமும் ஜன்னல் ஓரமாக ஒரு சிறுவன் வந்து நிற்பதையும், அவன் பாடங்களைக் கருத்துடன் கேட்பதையும் ஆசிரியர் கவனித்தார். ஒரு நாள் அவர் முத்துசாமியை உள்ளே அழைத்து, ''தம்பி, தினமும் ஏன் இப்படிக் கால் வலிக்கத் தெருவில் நிற்கிறாய்? உன் அப்பா, அம்மாவிடம் சொல்லி இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கச் சொல்வது தானே!'' என்றார். முத்துசாமி பதில் எதுவும் சொல்லவில்லை.

'நாள்தோறும் நம் பள்ளிக்கு வருகிறானே, இந்தச் சிறுவன் யார்?' என்று ஆசிரியர் விசாரித்தார். அப்போதுதான் அவருக்கு முத்துசாமியைப் பற்றித் தெரிந்தது.

அன்றே ஆசிரியர் தாசில்தாரிடம் சென்றார்.

கல்வி கற்பதில் முத்துசாமிக்கு உள்ள ஆர்வத்தை எடுத்துச் சொன்னார். தாசில்தார் அது கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். 'முத்துசாமி வயதிலே சிறியவன். அவன் படித்திருப்பதோ மிகவும் குறைவு.

ஆயினும், எவ்வளவு புத்திசாலியாயிருக்கிறான்! அவனை நன்றாகப் படிக்க வைத்தால், மிகமிகக் கெட்டிக்காரனாக விளங்குவான். படிக்க வேண்டிய பருவத்தில், வேலையில் வைத்திருப்பது சரியில்லை' என்று அவருக்குத் தோன்றியது.

அந்த தாசில்தார் வீட்டில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் தாசில்தாருடைய தங்கை மகன். அவனுக்கும் முத்துசாமியின் வயதுதான் இருக்கும். அவனையும், முத்துசாமியையும் ஒன்றாக உட்காரவைத்து, தாசில்தார் தினமும் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

ஒரு நாள், அவர் ஆங்கில ஆரம்பப் பாடப் புத்தகத்தில், இரண்டு பிரதிகளைக் கடையில் வாங்கி வந்தார். முத்துசாமியிடம் ஒரு பிரதியையும், தங்கை மகனிடம் மற்றொரு பிரதியையும் கொடுத்தார். அதிலுள்ள பாடங்களை வழக்கம் போல் சொல்லிக் கொடுத்து வந்தார்.

சில நாட்கள் சென்றன. தாசில்தார் இருவரையும் நோக்கி, ''நான் அடுத்த வாரம் உங்கள் இருவருக் கும் ஆங்கிலத்தில் பரீட்சை வைக்கப் போகிறேன். உங்கள் இருவரில் எவன் கெட்டிக்காரன் என்பதைப் பார்க்க வேண்டும்'' என்றார்.

அவ்வாறே ஒரு வாரம் சென்றதும், இருவருக்கும் பரீட்சை வைத்தார். தாசில்தாரின் தங்கை மகன் ஒரு சில கேள்விகளுக்கு மட்டுமே பதில் எழுதியிருந்தான். ஆனால், முத்துசாமியோ எல்லாக் கேள்விக்கும் பதில் எழுதியிருந்தார்; சரியாக எழுதியிருந்தார்!

இதைக் கண்ட தாசில்தார், முத்துசாமியை மேலும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். நாகப்பட்டினத்தில் இருந்த மிஷன் பாடசாலையில் முத்துசாமியைச் சேர்த்துவிட்டார். முத்துசாமி 18 மாதங்கள் அங்கு படித்தார். பிறகு, தாசில்தார் அவரைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். சென்னையில் இருந்த 'மெட்ராஸ் ஹைஸ்கூ'லில் சேர்ந்து முத்துசாமி கல்வி கற்றார். அப்போது அவர் கணக்கிலே புலியாக விளங்கினார். ஓய்வு நேரத்தில் ஏதேனும் புத்தகம் படித்துக் கொண்டேயிருப்பார். படித்ததையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்வார். அவருடைய அபார ஞாபக சக்தியை அறிந்து பலர் வியப்படைந்திருக்கிறார்கள்.

முத்துசாமி சென்னையில் படித்துக் கொண்டிருந்த போது, 'கல்வித் துறைக் கழகம்' ஒரு போட்டி வைத்தது. 'தீய பழக்கங்களும் அவற்றைத் திருத்தும் வழிகளும்' என்பதைக் குறித்து ஆங்கிலத்தில் மிகவும் நன்றாக எழுதும் மாணவனுக்கு 500 ரூபாய் பரிசு என்று அறிவித்திருந்தார்கள். பல மாணவர்கள் அப்போட்டியில் கலந்து கொண்டார்கள். அவர்களில் முத்துசாமியும் ஒருவர்.

அப்போதிருந்த சென்னை மாநிலக் கல்வித் துறைத் தலைவரும், உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரும் போட்டிக்கு வந்த கட்டுரைகளைப் படித்துப் பார்த்தார்கள். முத்துசாமியின் கட்டுரையைப் படித்துப் பார்த்த அவர்கள் இருவரும், ஒரு சிறுவன் இவ்வளவு திறமையாக, அழகாக எழுதியிருக்கிறானே!"

என்று மிகவும் வியப்படைந்தார்கள், அப்புறம் கேட்க வேண்டுமா? பரிசு முத்துசாமிக்கே கிடைத்தது.

பரிசாகக் கிடைத்த ஐந்நூறு ரூபாயையும் முத்து சாமி பத்திரமாக வைத்திருந்தார். கடைசி காலம் வரை ஒரு தம்படிகூட அதிலிருந்து எடுத்துச் செலவு செய்யவில்லை.

★ ★ ★

சென்னை உயர்நீதி மன்றத்தில் வெள்ளைக்காரர் ஒருவர் நீதிபதியாயிருந்தார். ஒரு நாள் அவர் வீட்டுத் தோட்டத்திற்குள் ஓர் இந்தியர் நுழைந்து விட்டார். அதனால், அந்த வெள்ளைக்கார நீதிபதிக்கு மூக் குக்கு மேல் கோபம் வந்துவிட்டது. கோபத்தில் அந்த இந்தியரை அவர் நன்றாக அடித்துவிட்டார்.

அடிபட்ட இந்தியர், வெள்ளைக்கார நீதிபதி மீது வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கு அப்போது மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த முத்துசாமி அய்யரிடம் விசாரணைக்கு வந்தது. அந்த வெள்ளைக்கார நீதிபதியை நேரில் வரவழைத்து விசாரிக்க வேண்டும் என்று அடிபட்டவர் வேண்டிக் கொண்டார். அதன்படி முத்துசாமி அய்யர், அந்த நீதிபதியை நேரில் வருமாறு உத்தரவிட்டார்.

இதைக் கேட்டுப் பலர் திடுக்கிட்டனர். உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருப்பவரை— அதிலும் ஒரு வெள்ளைக்காரரை நேரில் வரவேண்டுமென்று ஒரு மாஜிஸ்ட்ரேட் உத்தரவு போடுவது என்றால்

வியப்பாகத்தானே இருக்கும்? சிலர் முத்துசாமி அய்யரிடம் ''இது பெரிய இடத்து விஷயம். உங்களுக்கு இதனால் தீமையே ஏற்படும்'' என்று சொன்னார்கள். ''யாராயிருந்தால் என்ன? குற்றம் செய்தவர் நேரில் வரத்தான் வேண்டும்'' என்று முத்துசாமி அய்யர் பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

வெள்ளைக்கார நீதிபதிக்கு வேறு வழியில்லை. நேரில் வந்தார். விசாரணை நடந்தது. கடைசியில், வெள்ளைக்கார நீதிபதி செய்தது குற்றம்தான் என்றும், அதற்காக ரூபாய் மூன்று அபராதம் செலுத்த வேண்டும் என்றும் முத்துசாமி அய்யர் தீர்ப்புக் கூறினார். வெள்ளைக்கார நீதிபதி பேசாமல் அபராதத்தைக் கட்டி விட்டுச் சென்றார்.

நியாயம் வழங்குவதில் முத்துசாமி அய்யர் மிகவும் நேர்மையானவர்; அத்துடன் அஞ்சாத நெஞ்சமும் கொண்டவர் என்பதை இதனால் அறிய முடிகிறது.

★ ★ ★

முத்துசாமி அய்யருடைய நண்பர் ஒருவர் மற்றொருவரிடம் ரூபாய் இருநூறு கடன் வாங்கியிருந்தார். பல நாட்கள் ஆகியும், அவர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை. இதனால் பணம் கொடுத்தவர் முத்துசாமி அய்யரின் நண்பர் மீது வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கு முத்துசாமி அய்யரின் முன்பு விசாரணைக்கு வந்தது.

கடன் வாங்கியவர் தமது நண்பர் என்பது முத்துசாமி அய்யருக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும்,

தெரிந்ததாக அவர் காட்டிக் கொள்ளவே இல்லை. மற்ற வழக்குகளை நடத்துவது போலவே, அந்த வழக்கையும் நடத்தினார். தம் நண்பர் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றப் பார்க்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டார். உடனே தீர்ப்புக் கூறினார். தீர்ப்பின்படி அந்த நண்பர் வழக்குத் தொடுத்தவருக்கு ரூபாய் 200 கொடுக்க வேண்டி வந்தது. ஆனால் குறித்த காலத்தில் அவர் பணத்தைச் செலுத்தவில்லை. அதனால், அவரைக் கைது செய்ய முத்துசாமி அய்யர் உத்தரவிட்டார். அப்படியே அவர் கைது செய்யப்பட்டார். அப்போது முத்துசாமி என்ன செய்தார் தெரியுமா? நண்பருக்குப் பதிலாக தாமே அந்த இருநூறு ரூபாயையும் செலுத்தி, அவரைக் காப்பாற்றினார்.

முத்துசாமி அய்யர் நட்புக்கு மதிப்புக் கொடுப்பவர் என்பதையும், ஒரு சிறிதும் கடமை தவறாதவர் என்பதையுமே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

★ ★ ★

உயர்நீதிமன்றத்தில் 17 ஆண்டுகள் நீதிபதியா யிருந்து, பலரது பாராட்டுதல்களையும் பெற்றவர் முத்துசாமி அய்யர். மிகவும் உயர்ந்த பதவியில் இருந்த போதும் அவர் மிக மிக எளிய வாழ்க்கையே நடத்தி வந்தார்.

அவர் காலுக்குச் செருப்புப் போட்டுக் கொள்ள மாட்டார்; கழுத்துப்பட்டை அணிய மாட்டார். நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறும் போது, அவர் ஒரு

கண்ணை மூடிக் கொள்வார். இறகு பேனாவை முகத்துக்கு அருகே வைத்துக் கொள்வார்.

வக்கீல்கள் விவாதம் செய்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டேயிருப்பார். அப்போது வக்கீல்கள் அடிக்கடி அவரது வலது காலைக் கவனிப்பார்கள். அவருடைய முகத்தையல்லவா கவனிக்க வேண்டும்? ஏன் காலையே கவனிக்கிறார்கள்? காரணத்தோடு தான்.

ஒரு வக்கீல் எடுத்துச் சொல்லும் போது, முத்து சாமி அய்யர் தமது வலது கால் கட்டை விரலைப் பக்கத்து விரலுடன் அழுத்தினால், ''சரி, இனி நாம் பேசிப் பயனில்லை. நம் வழக்குத் தோற்றுவிடும்'' என்ற முடிவுக்கு அந்த வக்கீல் வந்து விடுவார். தீர்ப்பும் அப்படித்தான் இருக்கும்.





# விளையாட ஒரு தோழி

போர்பந்தரில் ஒரு திவான் இருந்தார். அதே ஊரில் பெரிய பணக்கார வியாபாரி ஒருவரும் இருந்தார். இருவரும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இருவரும் தங்களுடைய நட்பை இன்னும் உறுதிப்படுத்த நினைத்தார்கள். நினைத்தபடி ஒரு திட்டம் போட்டார்கள். திவானுடைய மகனுக்கும் வியாபாரியினுடைய மகளுக்கும் கல்யாணம் செய்து வைத்து விடுவது; இருவரும் சம்பந்திகள் ஆகிவிடுவது! இதுதான் அவர்கள் போட்ட திட்டம்.

அந்தத் திட்டப்படியே திவான் மகனுக்கும், வியாபாரி மகளுக்கும் கல்யாணம் நடந்தது. அப்போது அந்தப் பெண்ணுக்கு வயது என்ன

தெரியுமா? பதிமூன்று! மாப்பிள்ளைக்கும் கிட்டத்தட்ட அதே வயதுதான்!

கல்யாணம் என்றால் ஏதோ ஒரு விளையாட்டு என்றே அவர்கள் அப்போது நினைத்தார்கள். புதுப் புது உடைகள் உடுத்தலாம்; விதம் விதமான பட்சணங்கள் சாப்பிடலாம்; கொட்டுமேளம், பாட்டுக் கச்சேரிகளெல்லாம் கேட்கலாம். இவைதான் கல்யாணம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

கல்யாணம் நடக்கும்போது, 'விளையாடுவதற்கு ஒரு தோழி கிடைத்தாள்!' என்று அந்த மாப்பிள்ளைப் பையன் நினைத்தான். அது போலவே 'விளையாடு வதற்கு ஒரு தோழன் கிடைத்தான்' என்றே அந்தப் பெண்ணும் நினைத்திருந்தாள். ஆனால், 'உலகம் போற்றப் போகும் ஓர் உத்தமர் கிடைத்தார்' என்று அவள் நினைக்கவில்லை. அப்போது எப்படி நினைக்க முடியும்? ஆனால், பிற்காலத்தில் அந்த மாப்பிள்ளைப் பையன் உண்மையிலேயே உலகம் போற்றும் ஓர் உத்தமரானான்! அந்த மணப்பெண்ணும் உலகம் போற்றும் ஓர் உத்தமியாகி விட்டாள்! காந்திஜிதான் அந்த மாப்பிள்ளை. கஸ்தூரிபாய்தான் அந்த மணப்பெண்!

★ ★ ★

திருமணம் நடந்தபோது கஸ்தூரிபாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது. 'பெண் படித்து உத்தியோகமா பார்க்கப் போகிறாள்?' என்றே அந்தக் காலத்துப் பெற்றோர்களில் பெரும்பாலோர் நினைத்தார்கள்.

ஆனால், திருமணம் நடந்த பிறகு, கஸ்தூரி பாய்க்கு எப்படியாவது எழுதப் படிக்கக் கற்றுக்

கொடுத்து விட வேண்டும் என்று காந்திஜி நினைத்தார். ஆனால், பெரியவர்கள் முன்னால், கஸ்தூரிபாய்க்கு பாடம் சொல்லிக்கொடுக்க அவருக்குத் துணிச்சல் வரவில்லை. இரவு நேரங் களில் மட்டுமே சொல்லிக் கொடுத்து வந்தார். அத்துடன், கஸ்தூரிபாய்க்கு அப்போது கல்வியில் அதிகமான அக்கறை கிடையாது. ஆமை வேகத்தில் பாடம் நடந்து கொண்டிருந்தது. சுமாராக எழுதவும், எழுத்துக் கூட்டிப் படிக்கவுமே அப்போது கற்றுக் கொண்டார் கஸ்தூரிபாய்.

ஆனால், பிற்காலத்தில் காந்திஜியுடன் சேர்ந்து பல இடங்களுக்கும் சென்றபோது, மற்றவர்கள் புத்தகம், பத்திரிகைகள் படிப்பதை மிகவும் கவனமாகப் பார்ப்பார். 'நாமும் இவர்களைப் போல நன்றாகப் படிக்க வேண்டும்' என்று ஆசைப்படுவார். அந்த ஆசை வளர்ந்து கொண்டே வந்தது.

நாளடைவில், பகவத் கீதையைப் படிக்கும் அளவிற்கு கஸ்தூரிபாயின் கல்வியறிவு வளர்ந்து விட்டது! பகவத் கீதையை அடிக்கடி படித்து அப்படியே மனப்பாடம் செய்துவிட்டார்!

மனக் கஷ்டம் ஏற்படும்போதெல்லாம் பகவத் கீதையைப் பாராயணம் செய்ய ஆரம்பித்து விடுவார் கஸ்தூரிபாய்.

★ ★ ★

காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது பலமுறை சத்தியாக்கிரகம் செய்திருக்கிறார். அந்தச் சத்தியாக்கிரகங்களில் ஆரம்பகாலத்தில் ஆண்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள்.

ஒரு சமயம் அவர், பெண்களையும் சத்தியாக் கிரகத்தில் ஈடுபடுத்தவேண்டும் என்று நினைத்தார். மிகவும் ஆர்வமுள்ள பதினைந்து பெண்களை அவர் தேர்ந்தெடுத்தார். அந்தப் பதினைந்து பேர்களில் கஸ்தூரிபாயையும் சேர்த்திருப்பார் என்று நினைக் கிறீர்களா? இல்லை. 'கஸ்தூரிபாய்க்கு இதிலெல்லாம் ஆர்வம் இருக்காது. பிடித்தமில்லாத காரியத்தை நாம் செய்யச் சொல்வது நல்லதல்ல' என்றே காந்திஜி நினைத்துவிட்டார்.

ஆனால், கஸ்தூரிபாய் இதை அறிந்ததும் நேராக காந்திஜியிடம் வந்தார், ''உங்களை மற்றப் பெண்களெல்லாம் பின்பற்றும் போது, உங்கள் சொந்த மனைவியால் பின்பற்ற முடியாதா? கட்டாயம் என்னையும் சத்தியாக்கிரகத்தில் சேர்த்துக் கொள்ளத் தான் வேண்டும். உங்களுக்கு அவமானம் ஏற்படும் வகையில் நான் எதையும் செய்ய மாட்டேன். இது உறுதி'' என்று கூறினார்.

அதைக் கேட்டு, காந்திஜி ஆச்சரியப்பட்டார். கஸ்தூரிபாய் விருப்பப்படியே சத்தியாக்கிரகத்தில் சேர்த்துக்கொண்டார். எல்லோரும் மும்முரமாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். அப்போது காந்திஜி சிறைப்பட்டார். கஸ்தூரிபாயும் அவருடன் சிறையில் அடைபட்டார்.

அப்போது கஸ்தூரிபாய் கவலைப்படவில்லை; மகிழ்ச்சி அடைந்தார். 'நம் கணவர் நல்ல காரியத் துக்காகப் பாடுபடுகிறார். அவருடன் சேர்ந்து நாமும் பாடுபடுகிறோம்' என்று எண்ணி மனம் குளிர்ந்தார்.

★ ★ ★

ஆமதாபாத்தில் காந்திஜி ஓர் ஆசிரமம் ஏற்படுத்தி னார். அதில் ஆண்களும், பெண்களுமாக 25 பேர் இருந்தனர். எல்லோருக்கும் கஸ்தூரி பாய்தான் தாயாக விளங்கினார். சமையல் சம்பந்தமான வேலை களையெல்லாம் கஸ்தூரிபாய் கவனித்து வந்தார்.

அங்கு அடிக்கடி பலர் விஜயம் செய்வார்கள். சிலர் 'திடீர் விஜயம்' செய்வதும் உண்டு. எந்த நேரத்தில் யார் வந்தாலும் அவர்களுக்கு மலர்ந்த முகத்துடன் கஸ்தூரிபாய் உணவளிப்பார்.

ஒருநாள், ஆசிரமவாசிகள் அனைவரும் பகல் சாப் பாடு சாப்பிட்டுவிட்டு, அவரவர் வேலையைக் கவ னித்துக் கொண்டிருந்தனர். கஸ்தூரிபாயும் சாப்பிட்ட பின் வேலைகளை முடித்துக்கொண்டு பாயை விரித் துப் படுத்தார். வேலை செய்த அலுப்பினால் தூங்கி விட்டார்.

சிறிது நேரம் சென்றது. யாரோ ஆசிரமத்துக்குள் வரும் சத்தம் கேட்டது.

காந்திஜி யாரென்று பார்த்தார். நேருஜியின் தந்தையான பண்டித மோதிலால் நேருவும் சில நண்பர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அவர்கள் இன்னும் சாப்பிடவில்லை என்பதைக் காந்திஜி தெரிந்து கொண்டார். உடனே அவர் கஸ்தூரிபாயை எழுப்பவில்லை. மற்றவர்களை அனுப்பி, சாப்பாடு தயார் செய்யச் சொன்னார்.

அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் சமையல் வேலையில் ஈடுபட்டனர். அப்போது, ஓர் அம்மாள் எடுத்த தட்டு, கைதவறிக் கீழே விழுந்து விட்டது!

விழுந்த சத்தம் கேட்டுக் கஸ்தூரிபாய் விழித்தார். 'பூனைதான் தட்டைத் தள்ளியிருக்க வேண்டும்' என்று நினைத்தார். ஆனால், எழுந்து பார்த்த போதுதான் விஷயம் தெரிந்தது. உடனே காந்திஜி யைப் பார்த்து, 'ஏன், நீங்கள் என்னை எழுப்பியிருக்க லாமே! நான் என்ன, சோம்பேறியா? அல்லது, இந்தச் சிறு வேலையைக்கூடச் செய்ய முடியாதபடி கிழவியாகி விட்டேனா!'' என்று கேட்டார்.

''அப்படி ஒன்றும் இல்லை. தூங்கிக் கொண்டிருந்த உன்னை எழுப்பினால் தூக்கக் கலக்கத்தில் கோபித்துக்கொண்டு விடுவாயோ என்ற பயம் எனக்கு!'' என்று கூறிவிட்டுக் காந்திஜி சிரித்தார்.

''பயமா! உங்களுக்கா? அதுவும் என்னிடத்திலா?'' என்று கஸ்தூரிபாயும் சிரித்துக்கொண்டே கூறிவிட்டுச் சமையல் அறைக்குச் சென்றார்; மளமளவென்று வேலையைக் கவனித்தார். விரைவில் சமையல் முடிந்தது. விருந்தினரின் பசியும் பறந்தது.

★ ★ ★

தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது ஒரு சமயம் கஸ்தூரிபாய்க்கு உடல் நலமில்லாதிருந்தது. படுத்த படுக்கையிலிருந்தார். எந்த மருந்து கொடுத்தும் பயனில்லை. 'ஆபரேஷன் செய்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று டாக்டர் கூறியிருந்தார்.

ஏல்லோரும் பயந்தனர். ''உடல் நிலை இவ்வளவு மோசமாயிருக்கிறதே! இப்போது ஆபரேஷன் செய்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படாதோ!'' என்று சிலர் கூறினர்.

ஆனல், கஸ்தூரிபாய் கலங்கவில்லை. ''எதற்காகப் பயப்படுகிறீர்கள்? 'ஆபரேஷன்' செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணையே இல்லை'' என்று தைரிய மாகக் கூறினார்.

பிறகு, டாக்டர் ஆபரேஷன் செய்தார். ஆபரேஷன் முடிந்து ஒன்றிரண்டு நாட்களில் காந்திஜி ஓர் அவசர வேலையாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. டாக்டரிடத்திலும் டாக்டர் மனைவியிடத்திலும் கஸ்தூரிபாயைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி விட்டுக் காந்திஜி சென்று விட்டார்.

ஆபரேஷன் செய்தபிறகு கூட கஸ்தூரிபாயின் உடல்நிலை சீர்திருந்தவில்லை. அதற்கு மாறாக, மோசமாகிக் கொண்டே வந்தது. எழுந்து உட்கார முடியவில்லை; சரியாகப் பேசக்கூட முடியவில்லை.

டாக்டருக்கு வரவர பயம் ஏற்பட்டது. காந்திஜிக்கு உடனே அவர் கடிதம் எழுதினார். ''கஸ்தூரிபாய் மாட்டு இறைச்சி கலந்த உணவு சாப்பிட்டால்தான் பிழைப்பார். இல்லாவிடில் உயிருக்கே ஆபத்து!'' என்று எழுதினார்.

அதற்கு காந்திஜி, ''அவள் விரும்பினால் கொடுக் கலாம்'' என்று பதில் எழுதினார்.

ஆனால், கஸ்தூரிபாய் மாமிசம் சாப்பிட இணங்க வில்லை.

உடனே, டாக்டருக்குக் கோபம் வந்து விட்டது.

''என் வீட்டில் இனி கஸ்தூரிபாயை வைத்துக் கொள்ள முடியாது. நீங்கள் உடனே வந்து கூட்டிச் சென்றுவிடுங்கள்'' என்று அவர் காந்திஜிக்கு

ஆனல், கஸ்தூரிபாய் கலங்கவில்லை. ''எதற்காகப் பயப்படுகிறீர்கள்? 'ஆபரேஷன்' செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணையே இல்லை'' என்று தைரிய மாகக் கூறினார்.

பிறகு, டாக்டர் ஆபரேஷன் செய்தார். ஆபரேஷன் முடிந்து ஒன்றிரண்டு நாட்களில் காந்திஜி ஓர் அவசர வேலையாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. டாக்டரிடத்திலும் டாக்டர் மனைவியிடத்திலும் கஸ்தூரிபாயைக் கவனித்துக் கொள்ளச் சொல்லி விட்டுக் காந்திஜி சென்று விட்டார்.

ஆபரேஷன் செய்தபிறகு கூட கஸ்தூரிபாயின் உடல்நிலை சீர்திருந்தவில்லை. அதற்கு மாறாக, மோசமாகிக் கொண்டே வந்தது. எழுந்து உட்கார முடியவில்லை; சரியாகப் பேசக்கூட முடியவில்லை.


டாக்டருக்கு வரவர பயம் ஏற்பட்டது. காந்திஜிக்கு உடனே அவர் கடிதம் எழுதினார். ''கஸ்தூரிபாய் மாட்டு இறைச்சி கலந்த உணவு சாப்பிட்டால்தான் பிழைப்பார். இல்லாவிடில் உயிருக்கே ஆபத்து!'' என்று எழுதினார்.

அதற்கு காந்திஜி, ''அவள் விரும்பினால் கொடுக் கலாம்'' என்று பதில் எழுதினார்.

ஆனால், கஸ்தூரிபாய் மாமிசம் சாப்பிட இணங்க வில்லை.

உடனே, டாக்டருக்குக் கோபம் வந்து விட்டது.

''என் வீட்டில் இனி கஸ்தூரிபாயை வைத்துக் கொள்ள முடியாது. நீங்கள் உடனே வந்து கூட்டிச் சென்றுவிடுங்கள்'' என்று அவர் காந்திஜிக்கு



# ஆனந்த வருஷத்து அதிர்ஷ்டக் குழந்தை!

தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு சாமியார் இருந்தார். அவரை அனேகமாக அந்தப் பகுதியிலிருந்த எல்லோருக்குமே நன்றாகத் தெரியும். அவர் இறக்கும்போது, ''ஆனந்த வருஷத்திலே இங்கே ஓர் அதிசயம் நடக்கப் போகிறது. அதைப் பார்க்காமல் இறக்கிறேனே!'' என்று வருத்தப்பட்டாராம். அவர் கூறிய ஆனந்தவருஷம் எப்போது பிறக்கப் போகிறது என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

ஆனந்த வருஷம் பிறந்தது! அந்த வருஷத்தில் தான் நம் நாட்டுக்கு முதல் முதலாகப் புகைவண்டி வந்தது. அதைப் பார்த்தவர்கள், ''ஆஹா! என்ன அதிசயம்! என்ன அதிசயம்! மாடு இழுக்கவில்லை; குதிரை இழுக்கவில்லை; மனிதர்கூடப் பின்னாலிருந்து தள்ளவில்லை; புகையை விட்டுக்கொண்டு இவ்வளவு பெரிய வண்டி தானாக ஓடுகிறதே!'' என்று வியப்படைந்தார்கள்.

சிலர், ''சாமியார் சொன்னாரே, அது பலித்து விட்டது! இந்த அதிசயத்தைத்தான் அவர் சொல்லி யிருக்கிறார்!'' என்றார்கள்.

அந்த வருஷத்தில்தான் நம் நாட்டுக்குத் தந்தி வசதியும் வந்தது. ''தந்தி வரப் போவதைத்தான் அதிசயம் என்று சாமியார் சொல்லியிருக்க வேண்டும்'' என்று வேறு சிலர் நினைத்தார்கள்.

அதே வருஷம், சூரியமூலை என்ற கிராமத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்த வருஷமே, அதன் தகப்பனார் அரியலூரில் புதியதாக ஒரு வீடு கட்டினார். அப்போது அந்தக் குழந்தையினுடைய தாயார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ''இந்தக் குழந்தை பிறந்த வருஷமே நமக்குப் புது வீடு கிடைத்திருக்கிறது. இது அதிர்ஷ்டக் குழந்தைதான்! இங்கே ஏதோ ஓர் அதிசயம் நடக்கப் போவதாக அந்தச் சாமியார் சொன்னாரே, அவர் என் குழந்தையை நினைத்துத் தான் சொல்லியிருக்க வேண்டும்'' என்று அடிக்கடி பெருமையோடு சொல்லுவார்கள்.

தின்பாராம். கரண்டி அப்பம் சாப்பிட்டுச் சிறிது நேரம் சென்ற பிறகு, பழைய சோறு சாப்பிடுவாராம்.

★ ★ ★

சாமாவின் தந்தையார் ஊர் ஊராகச் சென்று கதைப் பிரசங்கம் செய்து வருவார். அவருடைய இராமாயணப் பிரசங்கம் மிகமிக நன்றாக இருக்கு மாம். அதனால், பல ஊர்களிலிருந்து அவருக்கு அடிக்கடி அழைப்பு வருமாம். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் மிகவும் அழகாக, கணீரென்று பாடுவாராம். பக்தி ததும்பும் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு, எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்களாம்.

தம்முடையை பிள்ளையும் நன்றாகச் சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் ஆசைப்பட் டார். அந்தக் காலத்தில் சங்கீத வித்துவான்களுக்குத் தெலுங்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. அதனால், சங்கீதம் பயிலுவதற்குத் தெலுங்கு அவசியம் என்று தந்தையார் நினைத்தார். சாமாவை ஒரு பள்ளியில் சேர்த்தார். அந்தப் பள்ளியில் தெலுங்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. சாமாவுக்குத் தெலுங்கு ஏற வில்லை. ஆனாலும், சங்கீதம், தமிழ் இரண்டையும் நன்றாகக் கற்று வந்தார்.

பிள்ளைக்குத் தெலுங்கில் அக்கறை இல்லை என்பது தந்தைக்குத் தெரிந்தது. உடனே, அவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. ‘‘எந்த வேலைக்கும் நீ பயன்படமாட்டாய். சமையல் வேலைக்குக்கூடத்

தகுதியில்லாதவன்'' என்று திட்டினார். அத்துடன் பள்ளிக்கு மகனை அனுப்புவதையும் நிறுத்திவிட்டார்.

ஆனாலும், சாமா சங்கீத ஆசையை விடவில்லை. யாரேனும் அழகாகப் பாடினால், ஆவலோடு கேட்டுக் கொண்டேயிருப்பார். அப்படியே திருப்பிப் பாடியும் காட்டுவார்.

ஒரு சமயம், உறவினர் ஒருவர் வீட்டில் உபநயனம் நடந்தது. சாமாவும் அவருடைய தந்தையும் அங்கே சென்றிருந்தார்கள். அப்போது ஒரு சங்கீத வித்து வான் நந்தனார் சரித்திரத்திலிருந்து சில கீர்த்த னங்களைப் பாடினார். கோபாலகிருஷ்ண பாரதியார் எழுதிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனங்களை அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் பாடு வார்கள். அன்று அந்த வித்துவான் பாடிய கீர்த்த னங்களில் ஒன்று சாமாவுக்கு மிகவும் பிடித்தது.

*தீயினில் மூழ்கினார்—திருநாளைப் போவார்*
*தீயினில் மூழ்கினார்.*

என்ற கீர்த்தனம்தான் அது. அதை நன்றாக மனத் தில் வாங்கிக் கொண்டார்.

கச்சேரி முடிந்த பிறகு, சாமா அதே கீர்த்தனத்தை அங்கு வந்திருந்த உறவினர்களிடம் பாடிக் காட்டி னார். ஆனால், அப்போது அவருடைய தந்தை அங்கே இல்லை. எங்கோ வெளியில் சென்றிருந்தார்.

சாமாவின் பாட்டைக் கேட்டவர்கள், ''ஆஹா! மிகவும் நன்றாகயிருக்கிறது. இன்னொரு தடவை பாடு. இன்னொரு தடவை பாடு'' என்று மீண்டும் மீண்டும் பாடச் சொல்லிக் கேட்டார்கள்.

சாமா உற்சாகமாகப் பாடிக்கொண்டேயிருந்தார். அந் தச் சமயம் பார்த்து, வெளியில் சென்றிருந்த தந்தை திரும்பி வந்தார். வந்தவர், 'யாரது இவ்வளவு இனிமையாகப் பாடுவது?' என்று நினைத்துக் கொண்டே உள்ளே எட்டிப் பார்த்தார். பார்த்தவர், 'அடடே, நம் சாமாவா' என்று வியப்படைந்தார்.

சிறிது நேரம் மறைந்திருந்தபடியே பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு, சாமாவின் எதிரிலே வந்தார். தந்தையைக் கண்டதும் பாட்டு நின்று விட்டது! ஆனால், தந்தையோ, ''ஏன் நிறுத்தி விட்டாய்? பயப்படாமல் பாடு. உனக்கும் நன்றாகச் சங்கீதம் வரும்போல் தெரிகிறது'' என்றார்.

சாமாவுக்கு மீண்டும் சங்கீதமும், தமிழும் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஆசை அவருக்கு அதிகமாயிற்று.

★ ★ ★

சாமாவுக்குத் தமிழ் படிப்பதிலே ஆர்வம் அதிகமா யிருந்தது. அவர் பல புலவர்களிடம் தமிழ் படித்தார். கடைசியாக, அவருக்கு மிகப் பெரிய அறிஞர் ஒருவர் ஆசிரியராகக் கிடைத்தார். 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை' என்றால் 'அடேயப்பா! அவர் பெரிய புலவரல்லவா! சிறந்த கவிஞரல்லவா!' என்று அந்தக் காலத்தில் எல்லோரும் வியந்து பாராட்டுவார்கள். அப்படிப்பட்ட பெரியவரிடம்தான் சாமா படித்து வந்தார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கு நல்ல பேரும் புகழும் இருந்தும், வறுமையால் அவர் அடிக்கடி

துன்பப்படுவார். ஆனால், அதை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவே மாட்டார்.

ஒருநாள் காலை நேரம். எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஒரு பலகையைப் போட்டு அதன் மேல் உட்கார்ந்திருந்தார். எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போதுகூட மாணவர் களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது அவரது வழக்கம். அன்றும் வழக்கம்போல் அவர் எதிரில் சாமாவும் மற்ற மாணவர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தாமாக எண்ணெய் தேய்த்துக்கொள்ள மாட்டார். ஒரு வேலைக்காரன் தான் வழக்கமாக அவருக்கு எண்ணெய் தேய்த்து விடுவான். அன்று அந்த வேலைக்காரன் எண்ணெய் எடுத்து வருவதற்காகச் சமையல் அறைக்குள் சென்றான். ஆனால், வெகு நேரமாகியும் அவன் திரும்பி வரவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பாடம் சொல்லிக் கொடுக்கும் மும்முரத்தில் எண்ணெயைப் பற்றி மறந்தே போய்விட்டார்.

ஆனால் சாமா அதை மறக்கவில்லை. 'என்ன இது! வேலைக்காரன் உள்ளே போய் எவ்வளவு நேரமாகிறது! ஏன் தாமதம்?' என்று நினைத்து மெதுவாக எழுந்தார். சமையல் அறைக்குள்ளே சென்றார். அங்கே எண்ணெய் ஒரு சொட்டுக்கூட இல்லை என்பதை அறிந்தார். உடனே ஒருவரிடமும் சொல்லாமல், வீட்டைவிட்டு வெளியே வந்தார். தலை தெறிக்க வேகமாக ஓடினார். எங்கே? கடைவீதியை நோக்கி. எதற்காக? எண்ணெய் வாங்கி வருவதற் காகத்தான்!

மடியிலே முடிந்து வைத்திருந்த காசை அவசர அவசரமாக அவிழ்த்தார். கடைக்காரரிடம் கொடுத் தார். தொன்னை நிறைய எண்ணெய் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தார். சமையற்காரரிடம் கொடுத்துக் காய்ச்சச் சொன்னார். பிறகு, ஒன்றும் தெரியாதவர்போல், மற்றவர்களுடன் வந்து உட்கார்ந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் காய்ச்சிய எண்ணையை வேலைக்காரன் கொண்டுவந்தான். பிள்ளையவர் களுக்கு எண்ணெய் தேய்த்துவிட்டான்.

குருவிடம் சாமிநாதய்யருக்கு எவ்வளவு பக்தி இருந்தது என்பதைக் காட்ட இதுபோல் இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

★ ★ ★

சாமிநாதய்யர் முதலில் கும்பகோணம் கல்லூரியில் பண்டிதராக வேலை பார்த்து வந்தார். அங்கு இருந்த போது மாணவர்கள் அவரிடம் மிகுந்த மரியாதை காட்டி வந்தார்கள்.

அவருடைய வகுப்பு என்றாலே அந்த மாணவர் களுக்கு ஒரே மகிழ்ச்சிதான்! ஆவலோடு பாடம் கேட்பார்கள். அங்கிருந்து **1903**இல் சென்னை மாநிலக் கல்லூரிக்கு அவர் வந்தார். அப்போது, அங்கு படித்த மாணவர்களில் பலர் ஆசிரியர்களை மதிப்பதே இல்லை. அதிலும் தமிழாசிரியர் என்றால் மிகவும் இளப்பமாகவே கருதி வந்தார்கள்.

அன்று வகுப்புப் பரீட்சை நடக்கவேண்டிய நாள். மாணவர்கள் ஒரேயடியாகக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது, சாமிநாதய்யர் ஒரு மாணவனைப் பார்த்து, ''ஏன் இப்படிச் சத்தம் போடு கிறீர்கள்?'' என்று கேட்டார்.

உடனே அந்த மாணவன், ''இங்கே இப்படித்தான் நடக்கும். இது கும்பகோணமில்லை'' என்று குத்த லாகப் பதில் சொன்னான்.

சாமிநாதய்யர் அவனுடைய பதிலைக் கேட்டுக் கோபப்படவில்லை. 'சரி, இப்போது இவர்களிடம் பேசுவதில் பயனில்லை' என்று நினைத்துச் சும்மா இருந்துவிட்டார். ஆனாலும், அவருக்கு ஒரு நம் பிக்கை மட்டும் இருந்தது. 'இதையும் ஒரு காலத்தில் கும்பகோணம் போல் ஆக்கிவிடலாம்' என்பதுதான் அந்த நம்பிக்கை.

அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. மாணவர் கள் விரைவிலே அவருடைய பெருமையை அறிந்து கொண்டார்கள். தகுந்த மரியாதை செலுத்தத் தொடங்கினார்கள்.

★ ★ ★

எவனாவது ஒரு மாணவன் மரியாதை இல்லாமல் நடந்துகொண்டால், அவர் நேரடியாக அவனைக் கண்டிக்க மாட்டார். வாழைப் பழத்தில் ஊசி ஏற்று வது போல் மறைமுகமாகப் பேசி அவனைத் திருத்தி விடுவார்.

ஒருநாள், வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்து கொண் டிருந்தது. முதல் வரிசையில் இருந்த மாணவன்,

வலது காலைத் தூக்கி இடது தொடை மேல் போட்டுக் கொண்டிருந்தான். அத்துடன் நிற்கவில்லை. அந்த வலது முழங்காலை இரண்டு கைகளாலும் கட்டிப் பிடித்து, ஆட்டி ஆட்டிக் கொண்டிருந்தான். அவன் பாடத்தைக் கவனிக்காமல் அலட்சியமாக இருப்பதைப் பார்த்தார் சாமிநாதய்யர். ஆனாலும், அவனிடம் எதுவுமே கூறவில்லை.

அப்போது நடந்து கொண்டிருந்தது கம்பராமாயணப் பாடம். அனுமானைப் பற்றி வருகிற கட்டம். சாமி நாதய்யர் அனுமானைப் பற்றிக் கூறத் தொடங்கினார்:

''அனுமானோ பெரிய வீரன். அவன் இராவண னுடைய சபைக்குச் சென்றதும், இராவணன் அவ னுக்கு ஆசனம் கொடுக்கவுமில்லை; உட்காரச் சொல்லவுமில்லை. அனுமான் அதைப் பற்றிக் கொஞ் சம்கூடக் கவலைப்படவில்லை. இராவணனுடைய சிம்மாசனத்திற்குப் பக்கத்திலே, தன்னுடைய வாலைச் சுற்றிச் சுற்றி ஒரு பெரிய ஆசனத்தை உண்டாக்கி விட்டான்! அது இராவணனுடைய சிம்மாசனத்தைவிட மிகவும் உயரமாயிருந்தது. அனுமான் ஒரே தாவில் அந்த ஆசனத்தின் மேல் தாவினான். கால் மேல் கால் போட்டு, முழங்காலை உயர்த்திக் கைகளால் பிடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தான். அப்போது அனுமான் உட்கார்ந்திருந்தது எப்படி இருந்தது தெரியுமா? இதோ இந்த மாணவர் உட்கார்ந் திருக்கிறாரே, இப்படித்தான்'' என்று கூறி முன் வரிசையில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந் திருந்த மாணவனைச் சுட்டிக் காட்டினார். அவ்வளவு தான்; மாணவர்கள் எல்லோரும் ஒரேயடியாக

வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சிறிது நேரம் வரை சிரிப்பு ஓயவில்லை.

அனுமார் கதை இப்படித் தன்னிடம் வந்து முடியும் என்று அந்த மாணவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத இதைக் கேட்டதும், அவன் திடுக்கிட்டான். மறுவிநாடியே காலைச் சரியாக வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். அவமானத்தால் அவன் தலை குனிந்தான்.

★ ★ ★

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, குறுந்தொகை, புறநானூறு– இவைகளையெல்லாம் இன்று நாம் புத்தகங்களாகப் பார்க்கிறோம். இவற்றை நமக்குப் பழைய ஏடுகளிலிருந்து எடுத்து, அச்சுப் போட்டுத் தந்தவர்தாம் தமிழ்த் தாத்தாவாகிய சாமிநாதய்யரவர்கள். அவர் தமிழுக்குச் செய்த பெரும் தொண்டைப் பாராட்டி அப்போது இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில அரசினர் 'மகாமகோபாத்தியாய' என்னும் பட்டத்தை அவருக்குக் கொடுத்தார்கள்.

அந்தப் பட்டம் கிடைத்ததைப் பாராட்டுவதற்காக ஒரு விழா ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் தமிழாசிரியராயிருந்த மாநிலக் கல்லூரியிலே தான் அந்த விழா நடைபெற இருந்தது. மகாகவி பாரதியார் இச்செய்தியைக் கேள்விப்பட்டார். உடனே அவருக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் சாமிநாத அய்யரைப் பாராட்டி ஒரு பாட்டு எழுதினார்; அந்தப்


பாடலை அவரே அந்த விழாவில் பாடினார். அதைக் கேட்டு வந்திருந்தோரெல்லாம் மகிழ்ச்சி அடைந்தனர்.

அப்போது பாரதியார் பாடிய அந்தப் பாடலின் கடைசி நான்கு வரிகளை இப்போது அதே மாநிலக் கல்லூரித் தோட்டத்தில் கல்லிலே பொறித்து வைத்திருக்கிறார்கள். ஆம்; திருவல்லிக்கேணிக் கடற்கரைப் பக்கம் சென்றால், அங்குள்ள மாநிலக் கல்லூரியின் முன்னே நிற்கும் சாமிநாதய்யர் சிலைக்குக் கீழே பாருங்கள்.

*பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்*
*காலமெலாம் புலவோர் வாயில்*
*துதியறிவாய்; அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்;*
*இறப்பின்றித் துலங்கு வாயே.*

என்ற வரிகளைக் காண்பீர்கள்!





# பதினான்கு வயதில் பத்திரிகாசிரியர் !

லாகூரில் ஒரு பெரிய சங்கம் இருந்தது. அது முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சங்கத்துக்குப் பல பத்திரிகைகள் வந்து கொண்டிருந் தன. அவற்றில், எல்லோரும் மிக மிக விரும்பிப் படித்த பத்திரிகை ஒன்றே ஒன்றுதான். அதன் பெயர் 'லைசானுஸ் சிக்த்' என்பது. தமிழிலே அதன் பெயரைக் கூற வேண்டுமானால் 'சத்தியத்தின் குரல்' என்று கூற வேண்டும்.

அந்தப் பத்திரிகையில் வரும் விஷயங்களெல்லாம் மிகவும் நல்ல விஷயங்களாகவே இருக்கும். அருமை யான நடையில், மிகவும் அழகாக எழுதி வந்தார், அதன் ஆசிரியர்.

அதைப் படித்தவர்கள் எல்லோரும் 'அடடா! இந்த ஆசிரியர் எவ்வளவு நன்றாக எழுதுகிறார்! இவர் சிறந்த அறிவாளியாக இருக்க வேண்டும்; நல்ல அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்; வயதிலும் முதிர்ந்தவராக இருக்க வேண்டும், என்று எண்ணினார்கள். அந்த ஆசிரியரை அங்கு வரவழைத்துப் பேசச் சொல்ல வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்கள்.

அந்தச் சங்கத்தின் ஆண்டுவிழா நெருங்கியது. ஆண்டு விழாவில் வந்து சொற்பொழிவாற்ற வேண் டும் என்று அந்த ஆசிரியருக்கு எழுதினார்கள். அவரும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

ஆண்டு விழா நடைபெறும் நாளும் வந்தது. ஆசிரியரைக் காண்பதற்காக ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள். எள் விழக்கூட இடமில்லை; அவ்வளவு பெரிய கூட்டம்!

பெரிய பெரிய பண்டிதர்கள், கவிஞர்கள், அறிஞர் கள் எல்லோரும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். அவர்களும் அந்த ஆசிரியரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில்தான் வந்திருந்தனர்.

விழா ஆரம்பமானது. விழாவிற்கு தலைமை வகித் தவர், ''இப்போது 'லைசானுஸ் சிக்த்' பத்திரிகையின் ஆசிரியர் பேசுவார்'' என்று கூறினார்.

உடனே, பதினான்கு வயதுப் பையன் ஒருவன் எழுந்து மேடைமீது வந்தான். அவனைப் பார்த்தவுடன் எல்லோருக்குமே வியப்பாக இருந்தது. ''என்ன! இந்தப் பையனா அந்த ஆசிரியர்! இருக்கவே இருக்காது'' என்று சிலர் நினைத்தனர்.

''ஒருவேளை இவன் அந்த ஆசிரியரின் மகனாக இருக்கலாம். அவர் வரமுடியவில்லை போலிருக்கிறது; இவனை அனுப்பி வைத்திருக்கிறார்'' என்று வேறு சிலர் நினைத்தனர்.

இப்படிப் பலரும் பல விதமாக நினைத்துக் கொண் டிருந்தபோது, அந்தப் பையன் சிறிதும் கூச்சமில்லாமல் தலையை நிமிர்த்தித் தைரியமாகப் பேச ஆரம்பித் தான். அவன் பேச எடுத்துக் கொண்ட விஷயமோ மிகவும் சிக்கலான விஷயம். ஆனால், அவன் கொஞ்சமும் சிக்கலில்லாமல், எவரும் புரிந்து கொள்ளும் முறையில் அற்புதமாகப் பேசலானான்; ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறினான்.

கங்கை நதி போலத் தங்குதடையின்றிப் பொங்கி வழியும் அவனுடைய பேச்சைக் கேட்கக் கேட்க எல்லோருக்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. 'உண்மையில் இவனாகத்தான் பேசுகிறானா; அல்லது இதில் மாயாஜாலம், மந்திரஜாலம் ஏதேனும் இருக்குமா!' என்றுகூடச் சிலர் சந்தேகப்பட்டனர். அவ்வளவு சிறப்பாக அவன் பேசினான்!

இப்படிப் பதினான்காவது வயதிலே சிறந்த பத்திரி காசிரியனாகவும், சிறந்த பேச்சாளனாகவும் விளங்கிய அந்தப் பையன், பிற்காலத்தில் சாதாரண மனித னாகவா இருந்திருப்பான்?

'கல்வியில் சிறந்தவர், காலமெல்லாம் நாட்டுக்கு உழைத்தவர், இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்காக இணை யில்லாத தொண்டு புரிந்தவர், இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தந்த மாபெரும் தலைவர்களில் ஒருவர்' என்று அனைவரும் போற்றும் அற்புத மனித ராகவே அவன் விளங்கினான். இப்போது உங்களுக் குத் தெரிந்திருக்கும். பாரத தேசத்தில் பத்தாண்டுகள் கல்வி மந்திரியாயிருந்த அபுல்கலாம் ஆஸாத் அவர்களே இக்கட்டுரையின் கதாநாயகர்.

★ ★ ★

ஆஸாத் மிகவும் சிறு பையனாக இருக்கும்போதே, மிகுந்த புத்திசாலியாக இருந்தார். எந்த விஷயத்தை யும் சுலபமாகப் புரிந்து கொண்டு விடுவார்.

எஸ்.எஸ்.எல்.ஸி. பாடத் திட்டம் என்று சொல் கிறோமே, அதேபோல் அரபியில் ஒரு பாடத் திட்டம் உண்டு. அதற்கு 'தர்ஸே நிஜாமி' என்று பெயர். சரித்திரம், பூகோளம், கணிதம், தர்க்கம், தத்துவம் முதலியவை யாவும் அந்தத் திட்டத்தில் அடங்கி யுள்ளன. அந்தத் திட்டத்தை நன்றாகப் படித்துத் தேர்ச்சிபெற வேண்டுமானால், கெட்டிக்கார மாணவனுக்குப் பத்து வருஷங்கள் ஆகும்; சாதாரண மாணவனுக்குப் பதினான்கு வருஷங்கள் ஆகும். ஆனால், நம் ஆஸாத் எத்தனை வருஷங்களில் அதைப் பூர்த்தி செய்தார், தெரியுமா? நான்கே நான்கு ஆண்டுகளில்தான்! பத்து வயதில் ஆரம் பித்துப் பதினான்காவது வயதில் அந்தத் திட்டத்தை முடித்து விட்டார்!

ஆஸாத் மாணவராக இருக்கும் போதே ஆசிரியராகவும் இருந்து வந்தார்! அவரிடம் பலர் பாடம் படித்து வந்தனர். அந்த மாணவர்களில் வயதான ஒரு கிழவரும் இருந்தார். அவர் தினமும் தவறாமல் ஆஸாத்திடம் வருவார். வந்து பாடம் கேட்டுச் செல்வார்.

ஆஸாத் எந்தப் பாடம் நடத்தினாலும், அதை மிகவும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறுவார். அவரிடம் படித்தவர்களெல்லாம் அவர் சொல்லிக் கொடுப்பதை மிகவும் சுலபமாகப் புரிந்து கொண்டுவிடுவார்கள். ஆனால், அந்தக் கிழ மாணவருடைய மூளையில் ஆஸாத் எது சொன்னாலும் சரியாக ஏறுவதில்லை.

ஒருநாள் ஆஸாத் அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒரு விஷயத்தை அவர் பல முறை விளக்கிக் கூறியும், அந்தக் கிழவருக்கு அது விளங்கவில்லை. அது மட்டுமல்ல; எப்படிச் சொல்ல வேண்டுமோ, அதற்கு நேர் எதிராகவும் அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார்!

ஆஸாத். தினமும் அவருக்குப் பொறுமையுடன் தான் பாடம் சொல்லி வந்தார். ஆனாலும், அன்று அவருடைய பொறுமை பறந்துவிட்டது. கோபத்தில் தம்முடைய கையிலிருந்த புத்தகத்தைத் தூக்கி அந்தக் கிழவர் முகத்திலே எறிந்து, 'உமக்குப் படிப்பு வராது. வீட்டுக்குப் போய்ப் புல்லைத் தின்னும்' என்று கூறிவிட்டார்.

பாவம், அந்தக் கிழவர் பேசாமல் அந்த இடத்தை விட்டுச் சென்றார். அன்று முழுவதும் அவர் சாப்

பிடவே இல்லை. மனத்தில் நிம்மதியில்லாத போது, அவர் எப்படிச் சாப்பிடுவார்?

இந்த விஷயம், ஆஸாத்தின் தந்தைக்குத் தெரிந்தது. உடனே அவர் ஆஸாத்தை அழைத்து, ''நீ இப்படிச் செய்யலாமா? அவருக்கு என் வயதாகிறதே! என்னைப் போலல்லவா அவரையும் நீ நினைத்து மரியாதையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டும்? கொஞ்சம்கூட உனக்கு வெட்கமாயில்லை? உடனே போய் அவரிடம் மன்னிப்புக் கேள்!'' என்று கோபம் கோபமாகப் பேசினார்.

உடனே ஆஸாத், மிகவும் வருத்தத்துடன் அந்தக் கிழவரிடம் சென்றார். அவரிடம், ''நான் தெரியாமல் அப்படிச் செய்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், அந்தக் கிழவரோ, ''இல்லை தம்பி, நீங்கள் என் ஆசிரியர். என்னைத் தண்டிக்க உங்களுக்கு எல்லாவித உரிமையும் உண்டு. அப்படியிருக்கும் போது, நான் எதற்காக மன்னிப்பது?'' என்று கூறினார். ஆனாலும், ஆஸாத் விடவில்லை. அருகிலேயே இருந்து அவரைக் கட்டாயப்படுத்திச் சாப்பிடச் செய்த பிறகுதான் அந்த இடத்தைவிட்டுச் சென்றார்.

★ ★ ★

ஆஸாத் சிறு வயதிலேயே அரபி, பாரசீகம், உருது முதலிய மொழிகளில் நல்ல புலமை பெற்றுவிட்டார். உருதுவில் மிகவும் அழகான பல பாடல்களை இயற்றியிருக்கிறார். பதினான்கு வயதிலேயே அவர் ஒரு நல்ல கவிஞர் என்று பெயர் பெற்றுவிட்டார்.

அப்போது, நாதிர்கான் என்று ஒரு கவிஞர் இருந்தார். ஆஸாத் அற்புதமாகக் கவி இயற்றுகிறார் என்பதைக் கேட்டதும் அவர் நம்பவே இல்லை. 'இந்தப் பையனாவது; கவி இயற்றுவதாவது! யாரோ ஒரு பெரியவர் கவிதைகளை எழுதி இவனிடம் கொடுத்திருக்கிறார். இவன் அவற்றைத் தான் எழுதியதாகக் கூறித் தம்பட்டம் அடிக்கிறான்' என்றே நினைத்தார்.

ஒருநாள், ஆஸாத் ஒரு புத்தகக் கடையில் நின்று, அங்குள்ள புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது, அவ்வழியாக வந்தார், நாதிர்கான். அவர் ஆஸாத்தைக் கண்டதும், ''என்னப்பா, பாட்டுக்கு மேல் பாட்டாக எழுதிக் குவிக்கிறாயாமே! அது உண்மைதானா? எங்கே, நான் சொல்லுகிறபடி செய், பார்க்கலாம். நான் ஒரு வரி சொல்கிறேன். அதைக் கடைசி அடியாக வைத்துக்கொண்டு நீ பாட்டு எழுத வேண்டும். உன்னால் முடியுமா?'' என்று கேட்டார்.

இதைக் கேட்டதும், ஆஸாத் சிறிதும் தயங்கவில்லை. ''சரி, சொல்லுங்கள், கடைசி அடியை'' என்றார்.

நாதிர்கான் கடைசி அடியைக் கூறினதும், ஆஸாத் மளமளவென்று மற்ற அடிகளைப் பாட ஆரம்பித்து விட்டார்! அதைக் கேட்டதும், நாதிர்கான் திகைத்துப் போய்விட்டார். உடனே, சந்தேகம் மறைந்தது; சந்தோஷம் பிறந்தது. அந்த இடத்திலேயே அவர் ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்து விட்டார்!

★ ★ ★

ஆஸாத் மழைக்குக்கூட ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியதில்லை. ஆங்கிலக் கல்வி தேவையில்லை என்றே அவருடைய அப்பா நினைத்தார். அதனால்தான், அவர் ஆங்கிலப் படிப்புக்கு ஏற்பாடு செய்யவில்லை.

ஆனால், அப்பா இறந்த பிறகு, ஆஸாத்திடம் அவருடைய நண்பர் ஒருவர் ஆங்கிலம் கற்கும்படி அடிக்கடி கூறி வந்தார். அதனால் ஆஸாத் அகராதியையும் இலக்கணத்தையும் வைத்துக் கொண்டு ஆங்கிலம் கற்க ஆரம்பித்தார்.

எல்லாவற்றையும் எளிதில் புரிந்துகொள்ளும் ஆஸாத்துக்கு, ஆங்கிலம் கற்பது சிரமமாகத் தோன்றவில்லை. வெகு சுலபமாக அவர் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டுவிட்டார். கற்றுக் கொண்டதோடு, நன்றாக விருத்தியும் செய்து கொண்டார்.

இப்போது அவர் நூல் நிலையத்தில் அநேக ஆங்கிலப் புத்தகங்கள் இருக்கின்றன. ஷேக்ஸ்பியர், பைரன், வேர்ட்ஸ்வொர்த் முதலிய ஆங்கிலக் கவிஞர்களின் புத்தகங்களையெல்லாம் அவர் நன்றாகப் படித்திருக்கிறார். ஆங்கிலத்தில் அவருக்குப் பிடித்தமான கவிஞர் பைரன்தான்!

★ ★ ★

தேசத் தொண்டில் ஈடுபட்ட பிறகு ஆஸாத் 'அல்—ஹிலால்' என்ற ஒரு பத்திரிகையை நடத்தி வந்தார். அதில் மிகவும் தீவிரமாக எழுதி வந்தார். அந்தப் பத்திரிகையைப் படித்து அநேகர் தேசீய உணர்ச்சி பெற்றனர்; தேசத் தொண்டில் ஈடுபட்டனர்.

அந்தப் பத்திரிகையில் மிகவும் அருமையான கட்டுரைகளை ஆஸாத் எழுதி வந்தார்.

அதைப் படித்தவர்களெல்லாம், அதைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்தார்கள்; இன்றும் சில வீடுகளில் அந்தப் பத்திரிகையின் பழைய இதழ்கள் இருக்கின்றன.

ஒரு சமயம், சுமார் மூன்று ரூபாய் மதிப்புள்ள பழைய அல்–ஹிலால் பத்திரிகைகள் ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டன! இதிலிருந்தே அந்தப் பத்திரிகைக்கு இருந்த மதிப்பை நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

★ ★ ★

அக்காலத்தில் நம்மை ஆண்டுவந்த ஆங்கிலேயரை யாராவது எதிர்த்தால், உடனே 'ராஜத்துரோகி' என்று அவர்கள் மீது குற்றம் சாட்டுவார்கள்; கைது செய்து சிறையிலும் அடைப்பார்கள்.

அதேபோல், ஆஸாத் மீதும் 1922–ஆம் வருஷம் குற்றம் சாட்டப்பட்டது. அவரை மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்தார். அப்போது, ஆஸாத் கூறிய வீர மொழிகளைக் கேட்டு எல்லோருமே உணர்ச்சி பெற்றனர். அவருடைய தைரியத்தைப் பாராட்டினர்.

அவர் மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்துக் கூறியதன் சுருக்கம் இதுதான்:

''என்ன வந்தாலும் நான் சத்தியத்தையே பேசுவேன். சத்தியத்தில்தான் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. முஸ்லிம்களின் தேச சரித்திரத்திலிருந்து ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன்.

''ஒரு மன்னன் கொடுங்கோல் புரிந்தான். அதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தான், ஒரு வீரன்; மன்னனின் அக்கிரமச் செயல்களைப் பகிரங்கமாக எடுத்துக் கூறினான். உடனே, அந்தக் கொடுங்கோல் அரசன் அந்த வீரனைப் பிடித்து வரும்படி உத்தர விட்டான்.

''தன் முன்னால் வீரனைக் கொண்டுவந்து நிறுத் தியதும், அந்தக் கொடுங்கோலன் அவனை அங்கம் அங்கமாக வெட்டும்படி சொன்னான். அப்படியே செய்தார்கள். ஆனாலும் அந்த வீரன் கலங்கவில்லை. 'கொடுங்கோலன்', 'கொடுங்கோலன்' என்று கூறிக் கொண்டே அசையாமல் நின்றான். உடனே, அரசன் அவன் நாக்கையும் வெட்டி எறியும்படி உத்தரவிட் டான். அப்போதும், அவன் பயந்து நாவை அடக்கிக் கொண்டு இருந்துவிடவில்லை. நாக்கை வெட்டி எடுக்கும் வரை அவன் 'கொடுங்கோலன்', 'கொடுங் கோலன்' என்று கூறிக்கொண்டே இருந்தான்.''

''கொடுங்கோலை எதிர்த்த அந்த வீரனுக்குக் கிடைத்த தண்டனையை, இப்போது தாங்கள் கொடுக்கப் போகும் தண்டனையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இதை எவனாவது லட்சியம் செய்வானா?'' என்று கேட்டார், ஆஸாத்.

கடைசியாக மாஜிஸ்ட்ரேட் ஆஸாத்துக்கு ஒரு வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார். உடனே, ஆஸாத் புன்முறுவலுடன், ''நான் எதிர்பார்த்ததை விட மிகக் குறைவாகவல்லவா தண்டனை கொடுத் திருக்கிறீர்கள்?'' என்றார்.

★ ★ ★

கல்கத்தாவில் இந்துக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய ஓர் இடம் இருந்தது. அங்கு, வெளியூர்களி லிருந்து முஸ்லிம் தையற்காரர்கள் அடிக்கடி வருவார் கள். வந்து, ஏதேனும் தையல் வேலை இருந்தால், அதைச் செய்து கொடுத்துவிட்டுக் கூலி வாங்கிச் செல்வார்கள்.

ஒரு சமயம், அவர்கள் அங்கு வந்திருந்தபோது, திடீரென்று இந்து—முஸ்லிம் கலகம் உண்டாகிவிட்டது. தெருவில் கலகக்காரர்கள் ஒருவரை ஒருவர் குத்திக் கொலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனாலும் இந்துக்கள் எல்லோருமே முஸ்லிம்களை வெறுக்க வில்லை; அதேபோல் முஸ்லிம்கள் எல்லோரும் இந்துக்களை வெறுக்கவில்லை. சில மத வெறியர் கள்தான் அந்தக் கலகத்தை உண்டாக்கினார்கள்.

முஸ்லிம் தையற்காரர்கள் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தனர். அப்போது அவர்களின் உயிரைப் பாதுகாக்க அந்தப் பகுதியிலிருந்த இந்துக் களே முன் வந்தனர். தங்கள் வீடுகளிலே தங்க இடம் கொடுத்தனர்.

விஷயம் தெரிந்ததும் ஆஸாத் தைரியமாக அந்தக் கலகக்காரர்களைக் கடந்து, தையற்காரர்கள் தங்கியிருந்த வீடுகளுக்கு வந்தார். அங்கு தங்கி யிருந்த முஸ்லிம்களை லாரிகளில் ஏற்றினார்; அவர்கள் உயிரைக் காப்பாற்றிய இந்துக்களுக்கு நன்றி செலுத்திவிட்டு, தையற்காரர்கள் ஒவ்வொரு வரையும் அவரவர் இடத்தில் கொண்டு போய்ப் பத்திரமாகச் சேர்த்துவிட்டுத் திரும்பினார்.

அதேபோல் இந்துக்களையும் அவர் காப்பாற்றினார். கலகத்தின்போது, ஒரு முஸ்லிம் வீட்டில் 13 இந்துக் கள் பயந்து போய் ஒளிந்திருந்தனர். அவர்களைப் பத்திரமாக அவரவர் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டும் என்று அந்த வீட்டுக்கார முஸ்லிம் மிகவும் முயன்று பார்த்தார். அந்தச் சமயத் தில் வாடகை மோட்டார்களோ, வண்டிகளோ கிடைக்கவில்லை. இந்த விஷயம் ஆஸாத்துக்கு எட்டியது. அன்று நடு இரவில் அந்த வீட்டுக்கு அவர் வந்தார். நகர சபைக்கு ஆள் அனுப்பி மோட் டார் கொண்டு வரச் செய்தார். அதில் 13 இந்துக் களையும் ஏற்றி அவரவர் வீட்டிலே பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்தார்.

கலகம் நடந்த மூன்று நாட்களும் ஆஸாத்துக்கு ஓய்வு கிடையாது; உணவு கிடையாது; உறக்கம் கிடையாது! பம்பரமாய்ச் சுழன்று சுழன்று கலகத்தை அடக்கப் படாத பாடுபட்டார்.





# காற்றாடியால் காயம் பட்டவர் !

அப்போது அந்தச் சிறுவனுக்கு ஏழு வயது இருக்கும். அந்த வயதிலே, அவன் நன்றாக மரம் ஏறக் கற்றுக் கொண்டிருந்தான். எந்த மரத்திலும் எளிதாக ஏறிவிடுவான் !

ஒருநாள் அவன், தன் வீட்டுத் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தான். அப்போது, சில சிறுவர்கள் அந்தத் தோட்டத்திற்குள் ஓடி வந்தார்கள். 'எதற்காக இப்படி ஓடி வருகிறீர்கள்?' என்று அந்தச் சிறுவன் அவர்களைக் கேட்கவில்லை. கேட்பதற்கு முன்பே, விஷயம் விளங்கி விட்டது.

பெரிய காற்றாடி ஒன்றைச் செய்து, மைதானத் திலே அவர்கள் பறக்க விட்டுக் கொண்டிருந்தார்கள்.

நன்றாகப் பறந்து கொண்டிருந்த காற்றாடி திடீரென்று நூலை அறுத்துக் கொண்டு, சுதந்திரமாகப் பறக்கத் தொடங்கி விட்டது. ‘அது எங்கேனும் ஓர் இடத்தில் போய் விழும்; உடனே அதை எடுத்துக் கொள்ள லாம்’ என்ற எண்ணத்தில் அந்தச் சிறுவர்கள் அதைப் பார்த்துக்கொண்டே ஓடி வந்தார்கள். ஆனால், அது தரையிலே விழவில்லை. வழியிலிருந்த ஒரு கொன்றை மரத்தின் உச்சிக் கிளையிலே வந்து உட்கார்ந்து கொண்டு விட்டது! அந்தக் கொன்றை மரத்தில் ஏறி, காற்றாடியை எடுப்பதற்காகத்தான் அவர்கள் ஓடி வந்தார்கள்.

ஏழு வயதுச் சிறுவன், கொன்றை மரத்தில் அவர்கள் ஏறுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தான். ஒருவன் சிறிது தூரமே ஏறினான். அதற்கு மேல் ஏற அவனால் முடியவில்லை. மற்றொருவன் பாதி மரம் ஏறிவிட்டான். அதற்கு மேல் செல்ல அவனுக்குப் பயம்! இன்னொருவன் தைரியமாக மேலே போனான். அவன் வயதிலே பெரியவன். அவன் ஒரு கிளையில் காலை வைத்ததும், ‘சட சட’ என்ற சத்தம் கேட்டது. அவனைத் தாங்கும் சக்தி அந்தக் கிளைக்கு இல்லை. இன்னொரு கிளையில் காலை வைத்தான். அது வளைய ஆரம்பித்தது. சிறிது நேரம் முயன்று பார்த்துவிட்டு, ‘‘உச்சிக் கிளைக்குப் போக நம்மால் முடியாதப்பா’’ என்று கூறிவிட்டான் அவன். வேறு வழியில்லாததால், எல்லோரும் ஏமாற்றத்துடன் கீழே இறங்கினார்கள்; வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

அவர்கள் போன பிறகு, வீட்டுக்காரச் சிறுவன் அந்தக் காற்றாடியை ஒரு முறை பார்த்தான். ‘‘ஏ

காற்றாடியே, உச்சிக் கிளையிலா உட்கார்ந்திருக் கிறாய்? அவர்களை ஏமாற்றியது போல், என்னையும் ஏமாற்ற முடியாது. இதோ உன்னிடம் ஏறி வரு கிறேன்'' என்று கூறிவிட்டு, அந்தக் கொன்றை மரத்தில் ஏறினான். ஒவ்வொரு கிளையாகப் பிடித்து ஏறி, உச்சிக் கிளைக்குச் சென்றுவிட்டான். அவன் மிகவும் சிறுவனாக இருந்ததால் கிளைகள் முறிய வில்லை; அதிகமாக வளையவும் இல்லை.

காற்றாடியின் அருகிலே அவன் சென்று விட்டான். இன்னும் ஒரு விநாடியில் காற்றாடி அவன் கைக்கு வந்துவிடும். ஆனால்...

என்ன ஆனால்?

எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. எதிர்பாராத விதமாக அப்போது ஒரு குரல் வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டது!

'டேய், டேய்!' என்ற அந்தக் குரலைக் கேட்டதும், 'ஐயோ, அம்மா பார்த்துவிட்டாளே!' என்று அவன் நினைத்தான். உடனே அவன் கைகால்கள் நடுங் கின. பிடித்திருந்த கிளையை விட்டுவிட்டான்!

அப்புறம்...?

கிளையை விட்டால் என்ன ஆகும்? தலைகீழாகத் 'தொப்'பென்று விழுந்தான். விழும்போது, முறிந் திருந்த ஒரு கிளையின் கூரான பாகம் அவனுடைய இடது விலாப் பக்கத்தில் பாய்ந்து விட்டது. உடனே, அங்கிருந்து 'குபுகுபு' என்று இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''ஐயோ! அம்மா!'' என்று அவன் வீறிட்டு அழுதான். அழுத குரல் கேட்டு அம்மா ஓடோடி வந்தாள். இரத்த வெள்ளத்தில் மகன்

கிடப்பதைக் கண்டு துடிதுடித்தாள். வாய்விட்டுக் கதறி அழுதாள். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் கேட்டு ஓடி வந்தனர். பையனின் பரிதாப நிலையைக் கண்டு பதைபதைத்தனர்.

உடனே அவனைத் தூக்கிக் கொண்டு அருகிலேயிருந்த ஒரு வைத்தியரிடம் சென்றார்கள். அந்த வைத்தியர் பச்சிலை வைத்துக் கட்டினார். பத்தே நாட்களில் காயம் குணமாகிவிட்டது.

அன்று மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அச்சிறுவனைக் காப்பாற்றிய நாட்டு வைத்தியருக்கு நாம் மிகவும் நன்றி செலுத்த வேண்டும்.

ஏன்?

அந்தச் சிறுவன் பிற்காலத்தில் சுகமாகச் சாப்பிட்டு விட்டுச் சொந்த வேலையைப் பார்த்துக் கொண் டிருக்கவில்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உறுதியுடன் நாட்டுக்கும், மொழிக்கும் எத்த னையோ வழிகளில் தொண்டாற்றி எல்லோருக்கும் நல்லவனாக விளங்கினான். திரு.வி.க. என்ற நான்கு எழுத்துக்களைச் சொன்னவுடனே, ''ஓ! அவரைப் பற்றி எங்களுக்கு நன்றாய்த் தெரியுமே! தமிழ்த் தென்றல், தொழிலாளரின் தோழர், சிறந்த தேச பக்தர், உயர்ந்த பத்திரிகாசிரியர், அன்பே உருவான அறிஞர் என்றெல்லாம் போற்றப்படும் திரு.வி.கலியாணசுந்தர முதலியார்தானே அவர்!'' என்று கேட்கத் தொடங்கி விடுவீர்கள். ஆம், அன்று காற்றாடி எடுக்கப் போய்க் காயம்பட்டு, நாட்டு வைத்தியரால் காப்பாற்றப்பட்ட சிறுவன் வேறு யாருமில்லை; திரு.வி.க.தான்! அதனால்தான் அந்த

நாட்டு வைத்தியருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும் என்று சொன்னேன்.

★ ★ ★

திரு.வி.க. பிறந்த 'துள்ளம்' என்ற கிராமத்தில், அமீனா முனிசாமிப் பிள்ளை என்ற ஒருவர் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர். பெரியவர்கள் அவரைப் பார்த்ததும், இருந்த இடத்தைவிட்டு எழுந்து நின்று மரியாதை செலுத்துவார்கள். குழந்தைகள் அவர் பெயரைக் கேட்டாலே நடுநடுங்குவார்கள். ஒருநாள் திரு.வி.க.வும் அவருடைய நண்பர்களும் தெருவிலே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது 'கலகல, கலகல' என்ற சலங்கைச் சத்தம் கேட்டது. உடனே, சிறுவர்கள் ஆட்டத்தை நிறுத்தி விட்டுச் சத்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். இரட்டை மாட்டுக் கூண்டு வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது.

''டேய், அமீனா முனிசாமி வருகிறார்!'' என்று ஒருவன் கத்தினான். மற்றொருவன் ''ஆமாம், ஆபத்து! வாருங்கள். ஓடிப் போய் ஒளிந்து கொள்ளலாம்'' என்றான்.

இதற்குள் வண்டி நெருங்கி வந்துவிட்டது. அப்போது திரு.வி.க. நண்பர்களைப் பார்த்து, ''ஏன் இப்படிப் பயந்து ஓடுகிறீர்கள்? அமீனா தலையில் கொம்பு முளைத்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

திரு.வி.க. இப்படிக் கேட்டது நண்பர்கள் காதில் விழுந்ததோ இல்லையோ, அமீனா முனிசாமிப் பிள்ளை காதில் நன்றாக விழுந்துவிட்டது!

உடனே அவர் வண்டியை நிறுத்தச் சொன்னார். வேகமாகக் கீழே இறங்கினார். 'விடு, விடு' என்று திரு.வி.க. நின்ற இடத்திற்குச் சென்றார். திரு.வி.க. அவரைக் கண்டு பயந்து ஓடவில்லை. தைரியமாக நின்று கொண்டிருந்தார். அமீனா திரு.வி.க.வின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, நேராக அவரது தந்தையாரிடம் சென்றார்.

இந்தக் காட்சியைக் கண்ட எல்லோரும், என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்று கவலைப் பட்டார்கள். ஆனால் திரு.வி.க. துளியும் கவலைப்படவில்லை. தம்முடைய மகனை, அமீனா இழுத்து வருவதைக் கண்ட தந்தையார் திடுக்கிட்டார். ''மன்னிக்க வேண்டும், என்ன நடந்தது?'' என்று பணிவோடு கேட்டார்.

அமீனா நடந்ததைச் சொன்னார். பிறகு, ''இவனை நீர் நல்ல முறையில் வளர்க்க வேண்டும். இவன் பிற்காலத்தில் பெரிய அறிஞனாவான்'' என்று கூறினார்.

அமீனா வாய்க்குச் சர்க்கரை போட்டிருக்க வேண்டும். அவருடைய வாக்குப் பலித்து விட்டதல்லவா?

★ ★ ★

திரு.வி.க. சிறுவராயிருந்தபோதே, அவருடைய தந்தையார் கிராமத்திலிருந்து சென்னைக்குக் குடும்பத்துடன் வந்துவிட்டார். நான்காவது ஐந்தாவது படிக்கும்போதெல்லாம் அவர் மிகவும் பலவீனமாக இருப்பார். அவரது உடல் நிலை மோசமாயிருப்பதைக் கண்டு, அவருடைய தந்தையார் மிகவும் கவலைப்

பட்டார். பல வைத்தியர்களிடம் பையனைக் காட்டி, மருந்துகள் வாங்கிக் கொடுத்து வந்தார். என்ன மருந்து கொடுத்தும் பயனில்லை.

கடைசியாக ஒரு வைத்தியர் ஒருவகை எண்ணெயைத் தயார் செய்து கொடுத்தார். அந்த எண்ணெயைச் சாப்பிடுகிறவர்கள், வேறு எந்தவித எண்ணெய்ப் பலகாரத்தையும் சாப்பிடக்கூடாது.

திரு.வி.க.விற்கு வீட்டில் பத்திய உணவே தயார் செய்து கொடுத்து வந்தார்கள். வீட்டில் மட்டும் பத்திய உணவு சாப்பிட்டால் போதுமா? வெளியிலும், கட்டுப்பாடாக இருக்க வேண்டாமா?

ஒருநாள், பள்ளிக்கூடத்தின் முன்னால் கொண்டு வந்து விற்ற உளுந்துவடை ஒன்றை வாங்கித் தின்று விட்டார், திரு.வி.க. அதனால் உடம்பிலே கோளாறு ஏற்படத் தொடங்கியது! கை கால்களைச் சரியாக நீட்ட மடக்க முடியவில்லை. முடக்குவாதம் போல் வந்துவிட்டது!

வைத்தியர்கள் என்ன என்னவோ செய்து பார்த்தார்கள். குணம் ஏற்படவில்லை. ''சிறிது சிறிதாக நடக்கப் பழகவேண்டும். பிறகு ஓடி ஆடி விளையாடினால் நாளடைவில் குணமாகிவிடும்'' என்றார்கள். அவ்வாறே திரு.வி.க. தினமும் தட்டுத் தடுமாறி நடந்து பழகினார். நாளுக்கு நாள் நல்ல மாறுதல் ஏற்பட்டது. சில நாட்களில் அவர் ஓடி ஆடி விளையாடத் தொடங்கினார். விரைவில் உடல்நிலை சரிப்பட்டு விட்டது. நல்லகாலம்!

★ ★ ★

இராயப்பேட்டையில் அன்று திருவிழா. மக்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். ஒரு வீதி வழியாக சுவாமி வலம் வந்துகொண்டிருந்தது.

அந்த வீதியில் ஒரு வீட்டின் முன்னால் வந்ததும் சுவாமி நின்றது. அந்த வீட்டின் வாயிலில் ஒரு கூடை நிறையத் தேங்காய்கள் வைத்திருந்தார்கள். சுவாமிக்குத் தேங்காய் உடைப்பதாக அவர்கள் வேண்டிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு தேங்கா யாக எடுத்துத் தரையில் ஓங்கி அடித்தார்கள். தேங்காய்கள் உடைபட்டுச் சிதறி நாலா பக்கமும் போய் விழுந்தன.

அப்போது, அங்கே சில சிறுவர்கள் நின்று கொண் டிருந்தார்கள். அவர்களில் திரு.வி.க.வும் ஒருவர். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று. அவர்க ளில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்து, ''அதோ ஏராளமான தேங்காய்களை உடைக்கிறார்கள். நாம் எல்லோரும் ஓடிப்போய், உடைபடும் தேங்காய்களை எடுக்க வேண்டும். எவன் அதிகமாக எடுக்கிறானோ, அவனே பலசாலி... என்ன, நான் சொன்னபடி செய்ய லாமா?'' என்று கேட்டான். உடனே எல்லோரும் 'சரி' என்றார்கள்.

மறுவிநாடி, தேங்காய்கள் உடைக்கும் இடத்தை நோக்கி ஓடினார்கள். உடைபடும் தேங்காய்களைப் பாய்ந்து பொறுக்கினார்கள். முக்கால் பங்கு தேங் காய்கள் தீர்ந்துவிட்டன. அப்போது எல்லோரையும் விட அதிகமாக எடுத்திருந்தவர் திரு.வி.க.தான். மற்றவர்களுக்கெல்லாம் அவர் மீது பொறாமை. தேங்காய் உடைப்பவருக்குக் கூட அவர் மீது ஏனோ

கோபம் உண்டாகிவிட்டது. தன் கையிலிருந்த தேங்காயை திரு.வி.க.வின் கையைப் பார்த்து ஓங்கி அடித்தார். அவ்வளவுதான்; 'ஆ!' என்று சுருண்டு அங்கே விழுந்தார் திரு.வி.க. எல்லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டு பார்த்தார்கள். திரு.வி.க.வின் கைவிரல்களில் ஒன்று நன்றாக அடிபட்டு நசுங்கிப் போய்விட்டது. இரத்தம் 'குபு குபு'வென்று வழிந்தது.

சிறிது நேரத்தில் திரு.வி.க. எழுந்தார். அடிபட்ட கைவிரலைத் துணியால் சுற்றிக் கொண்டு நேராக ஓர் ஆங்கில வைத்தியசாலைக்குப் போனார். அங்கிருந்த டாக்டர் கை விரலை உற்றுப் பார்த்தார். ''தம்பி, இந்த விரலைச் சரிப்படுத்த முடியாது. உடனே எடுத்து விட வேண்டும்'' என்றார்.

திரு.வி.க.வுக்கு அந்த விரலை இழக்க மனமே இல்லை. 'என்ன செய்வது?' என்று யோசித்துக் கொண்டிருந்தார். அச்சமயம், பக்கத்திலிருந்த அறைக்குள் டாக்டர் ஏதோ வேலையாகச் சென்றார். இனி இங்கு இருந்தால் விரலுக்கு ஆபத்து என்று எண்ணி, டாக்டர் வெளியில் வருவதற்குள் திரு.வி.க. அந்த இடத்தை விட்டு நழுவி விட்டார்!

நேராக, தமக்குத் தெரிந்த ஒரு தமிழ் வைத்திய ரிடம் சென்றார். நடந்ததை விவரமாகக் கூறினார். அந்த வைத்தியர், பச்சிலைகளை அரைத்து, விரலில் வைத்துக் கட்டினார். சில நாட்களில் காயம் ஆறியது. விரலும் பிழைத்தது.

★ ★ ★

திரு.வி.க. பத்தாவதுடன் படிப்பை முடித்துக் கொண்டார். பிறகு, வேலைக்கு மனுப்போட்டார்.

இப்போது சென்னையில் பிரபலமாயிருக்கும் ஸ்பென்ஸர் கம்பெனியில் அவருக்குக் குமாஸ்தா வேலை கிடைத்தது.

அந்த வேலையில் இருக்கும்போதே அவர் ஓய்வு நேரத்தில் தமிழ் நூல்களைப் படித்து வந்தார். தினமும் செய்தித்தாள் படிக்காமல் இருக்கமாட்டார். காலையில் படித்த செய்திகளை, பகல் நேரத்தில், இடைவேளையில் ஸ்பென்ஸர் கம்பெனித் தொழிலாளர்களிடம் விவரமாக எடுத்துக் கூறுவார். சில சமயங்களில், செய்தித் தாளில் உள்ள முக்கிய பகுதிகளை அவர்களிடம் படித்துக் காட்டுவதும் உண்டு.

அந்தக் காலத்தில், திலகர் ஆங்கிலேயரை எதிர்த்துப் பல இடங்களில் கிளர்ச்சி செய்து வந்தார். அதைப் பற்றிய செய்திகளைத் திரு.வி.க. உணர்ச்சியோடு தொழிலாளரிடம் படித்துக்காட்டுவார். அவர்களுக்கும் நம் நாடு விடுதலை பெற வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் அதிகரித்துவிட்டது.

தினந்தோறும் இடைவேளையில், திரு.வி.க. பத்திரிகை படித்து வருவதை அங்கிருந்த ஓர் ஐரோப்பியர் கேள்விப்பட்டார். உடனே, அவர் திரு.வி.க.வை அழைத்து, ''இங்கு நீர் தொழிலாளருக்குப் பத்திரிகைச் செய்திகளைச் சொல்லி வருவதாக அறிந்தேன். இது பெரிய குற்றம். இன்று முதல் நீர் இந்த வழக்கத்தை விட்டுவிட வேண்டும்'' என்றார்.

''வேலை நேரத்தில் பத்திரிகைச் செய்திகளைச் சொல்லவில்லையே! ஓய்வு நேரத்தில்தானே சொல்லுகிறேன்?'' என்றார் திரு.வி.க.

''எந்த நேரமாயினும் சரி, இந்தக் கம்பெனிக்குள் இருக்கும்போது, பத்திரிகை படிப்பதோ, பத்திரிகைச் செய்திகளைச் சொல்லுவதோ கூடாது. இது என் கண்டிப்பான உத்தரவு'' என்றார் ஐரோப்பியர்.

திரு.வி.க. அவருக்குப் பதில் எதுவும் சொல்ல வில்லை. அன்று பிற்பகலே அந்த வேலையை உதறித் தள்ளிவிட்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

★ ★ ★

திரு.வி.க. குமாஸ்தா வேலையை விட்ட பிறகு சென்னையில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு அவருக்கு நல்ல பெயர். விரை விலே தலைமைத் தமிழாசிரியரானார்.

ஒருநாள், நகரிலே பெரிய அரசியல் கூட்டம் ஒன்று நடந்தது. அந்தக் கூட்டத்திலே பேசும்படியாக திரு.வி.க.வைக் கேட்டுக்கொண்டார்கள். திரு.வி.க. அதற்கு முன்பு பல சங்கங்களில் இலக்கிய சம்பந்தமாகப் பேசியிருக்கிறார். ஆனாலும், அரசியல் கூட்டத்தில் அவர் பேசியதில்லை. அதுதான் முதல் முதலாக அவர் பேசிய அரசியல் கூட்டம். அவர் பேசியதைக் கேட்டு அங்கு கூடியிருந்தவர்கள் வியப்படைந்தார்கள்; மிகுந்த மகிழ்ச்சி அடைந் தார்கள். காரணம், அந்தக் காலத்தில் அரசியல் மேடையில் பேசுவோரெல்லாம் பெரும்பாலும் ஆங்கி லத்திலே பேசி வந்தார்கள். ஒரு சிலர்தான் தமிழில் பேசுவார்கள். அவர்களும் திரு.வி.க.வைப் போல் அவ்வளவு அழகாகவும், தெளிவாகவும், நல்ல தமிழில், உயர்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறிய தில்லை. அதனால், அவர் பேச்சை அன்று கேட்டவர்

கள், அடிக்கடி கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

''இவ்வளவு நன்றாகப் பேசக்கூடியவர், பள்ளி ஆசிரியராக இருப்பதைவிட ஒரு பத்திரிகையின் ஆசிரியராயிருந்தால், எவ்வளவு உபயோகமாயிருக்கும்! தமிழ்நாடு முழுவதும் அரசியல் கருத்துக்களை எடுத்து அழகாகக் கூறலாமே!'' என்று அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த சில தலைவர்கள் நினைத்தார்கள். நினைத்ததோடு நிற்கவில்லை; 'தேசபக்தன்' என்ற தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து, திரு.வி.க.வை அதன் ஆசிரியராக இருக்கச் செய்தார்கள்.

'தேச பக்தன்' பத்திரிகை மூலமாகவும், அதற்குப் பிறகு 'நவசக்தி' என்ற பத்திரிகை மூலமாகவும் நாட்டுக்கும், மொழிக்கும், தொழிலாளருக்கும் அவர் செய்துள்ள சேவை அளவில் அடங்காது.

* * *

ஒரு நாள் *ஓர் இளைஞர் திரு.வி.க.வைப் பார்க்கச் சென்றிருந்தார். அப்போது, ஒவ்வொருவருக்கும் தாய் மொழி எவ்வளவு முக்கியமானது என்பதை திரு.வி.க. விளக்கமாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அதை அந்த இளைஞரிடம் கூறினார். அதன் சுருக்கம்:

பங்களூரில் ஒரு சாமியார் இருந்தார். அவர் வங்காளத்தைச் சேர்ந்தவர். பெயர் யோகானந்தீஸ்

★ இப்புத்தக ஆசிரியர்தான் அந்த இளைஞர்

வரர். அவர் திரு.வி.க.வுக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவர் ஒரு முறை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது திரு.வி.க.வைப் பார்த்தார். ''நான் நாளை கல்கத்தாவுக்குப் போகிறேன். அங்கு எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் சென்று ஒரு பெரிய 'ஆபரேஷன்' செய்துகொள்ள வேண்டும்'' என்றார்.

உடனே திரு.வி.க. ''இதற்காகவா நீங்கள் கல்கத்தா போகிறீர்கள்? இங்கேயே பல கைதேர்ந்த டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் 'ஆபரேஷன்' செய்து கொள்ளலாமே! டாக்டர் ரங்காச்சாரியாரைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே! அவர் பெரிய நிபுணர்! எனக்கு மிகவும் வேண்டியவர் அவரிடம் நான் உங்களை அழைத்துச் செல்லுகிறேன்'' என்றார்.

ஆனால், அந்த வங்காளச் சாமியார் இசையவில்லை. கல்கத்தாவுக்கே போகவேண்டுமென்று கூறினார். திரு.வி.க. பலமுறை வற்புறுத்தியும் பயனில்லை.

கடைசியில் திரு.வி.க. ''உங்களுக்கு டாக்டர் ரங்காச்சாரி மீது நம்பிக்கை இல்லையா? அல்லது, என் பேச்சில் நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சாமியார், ''அப்படி ஒன்றும். இல்லை. என் தாய்மொழி வேறு. உங்கள் டாக்டர்களின் தாய்மொழி வேறு. எனக்கு வங்காளியும் ஆங்கிலமும்தான் தெரியும். அவர்களுடன் நான் வங்காளியில் பேசினால், அவர்களுக்குப் புரியாது.

ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும். நான் இப்போது நன்றாகத்தான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். ஆனால், 'ஆபரேஷன்' செய்துகொள்ளும் சமயம் ஒருவேளை நான் நினைவு இழந்து விடக்கூடும். அப்போது எனக்கு அந்நிய மொழியாகிய ஆங்கிலம் பேச வருமோ, வராதோ! அப்போது நான் என் சொந்த மொழியாகிய வங்காளியில்தான் பேசுவேன். நான் பேசுவது என்ன என்பதை வங்காளி தெரிந்த டாக்டராயிருந்தால், எளிதில் புரிந்து கொள்வார். இங்குள்ள டாக்டர்களால் புரிந்து கொள்ள முடியுமா? அதனால்தான் நான் கல்கத்தா போகவேண்டும் என்று சொல்கிறேன்'' என்றார்.

–இந்த நிகழ்ச்சியைத் திரு.வி.க. அந்த இளைஞரிடம் கூறிவிட்டு, ''பார்த்தீர்களா, தாய்மொழியின் பெருமையை! ஆபத்துக்கு உதவுவது அந்நிய மொழியன்று; தாய்மொழிதான்'' என்றார். மறுவிநாடி, ''அடடே, இப்போது நான் கூறிய நிகழ்ச்சியை நான் எழுதிய 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்ற புத்தகத்தில் சேர்க்க மறந்து போனேனே!'' என்றார்.

ஆயினும், அந்த அரிய நிகழ்ச்சியை நம்மால் மறக்க முடியுமா?



# இவர்கள் யார்?

- புலியைத் தேடிப் புறப்பட்டவர்!
- எட்டு ரூபாயில் படித்தவர்!
- கணக்குப் போடாமல்
  கவிபாடியவர்!
- சொந்தக் கையிலே சூடுபோட்டுக்
  கொண்டவர்
- பெயர் தெரியாத கவிஞர்!
- சரியான விடைக்குத்
  தண்டனை பெற்றவர்!
- பதினாறு வயதில்
  பாட்டுக் கட்டியவர்!

---

கண்டு பிடியுங்கள்!

---